

காமடி மார்ச் 1994 விலை ரூ. 3-00



SL
ல2ம2l1,N59TK
N94
193447



மயிலை அருள்மிகு கபாலீசுவரர் ஆலயப் பங்குனிப் பெருவிழாவையொட்டி திருத்தேர் விழா மிகச் சிறப்புற நடைபெற்றது. மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு நடேசன் பால்ராஜ் அவர்கள் கலந்துகொண்டு திருத்தேர்வடம் பிடித்தார்கள், காவல்துறை ஆணையர் திருமிகு இராஜகோபாலன் ஐ.பி.எஸ்., அறநிலையத்துறை ஆணையாளர் திருமிகு ஜி. இராமகிருஷ்ணன் ஐ.ஏ.எஸ். ஆகியோர் இவ்விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தனர். திருக்கோயில் நிர்வாக அதிகாரி மற்றும் துணை ஆணையாளருமான திரு ப. ராஜா பி.எஸ்.சி., பி.எல்., அவர்களும் அறங்காவலர் பெருமக்களும் விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்திருந்தனர்.



திருக்கோயில்களே நமது சமுதாய நல நிலையங்கள். திருக்கோயில்களின் மேம்பாட்டால்தான் நமது தமிழகத்தின் பண்பாடும் கலாச்சாரமும் மேம்பட்டு விளங்குகிறது. ஆகவேதான் திருக்கோயில் பராமரிப்பில் அதிக ஆர்வம் கொண்டு, சிரத்தையுடன் ஆலயங்களை மேலும் மேம்படுத்த பாடுபட்டு வருகிறோம்.

—மாண்புமிகு தமிழக முதல்வர்

**டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்**



மயிலை அருள்மிகு கபாலீசுவரர் ஆலயத்தில் திருத் தொண்டர் பெருமை போற்றும் அறுபத்துமூவர் விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு நடேசன் பால்ராஜ் அவர்கள் கலந்துகொண்டார்கள்.

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி நெடுஞ்சாலை,
சென்னை — 600 034.
தொலைபேசி எண்: 8279407

ஆசிரியர் :
டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A.,Ph.D.


முகப்பு:

புள்ளிருக்குவேளூர்
அருள்மிகு முத்துக்குமார சுவாமி


தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
மற்றும் வரலாற்று ஆராய்ச்சி
25 மே 1994
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
எழும்பூர், சென்னை



| மாலை : 36 | திருவள்ளுவர் ஆண்டு 2025 ஸ்ரீமுக ஆண்டு பங்குனி<br>மார்ச் 1994 விலை ரூ. 3-00 | மணி: 3 |
| --- | --- | --- |


## திருக்கோயில் வாசகர்களுக்கு அறிவிப்பு

அன்பு வாசகர்களே! வணக்கம்

திருக்கோயில் திங்கள் இதழின் உறுப்பினர்களாகச் சேர விருப்பம் உள்ளவர்கள்

உயர்திரு ஆணையர் அவர்கள்
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை
சென்னை — 600 034

என்ற முகவரிக்கு பணவிடை அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

### சந்தா விவரம்

| | | | |
| --- | --- | --- | --- |
| அரை ஆண்டு | — | ரூ. | 18-00 |
| ஓர் ஆண்டு | — | ரூ. | 36-00 |
| ஆயுள் | — | ரூ. | 300-00 |

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும்.
முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.

## பொருளடக்கம்


திருநாவுக்கரசர்
—டாக்டர் திருமுருக கிருபானந்தவாரியார்

அருள்மிகு கொளஞ்சியப்பர் ஆலயத்தில் நிகழ்த்தப்படும் விசேட நேர்த்திக் கடன்
—டாக்டர் செல்வகணபதி

திருவருள் சுரக்கும் திருவாஞ்சியம்
—புலவர் பொன். திருக்கண்ணபுர சுப்பிரமணியன்

கடவுளை அழைக்கும் சித்தர் கருவூர்த்தேவர்
—அருள்முருக செளந்தரராச அடிகளார்

நம்நாட்டுச் சித்தர்கள்
—டாக்டர் இரா. மாணிக்கவாசகம்

அருள்மிகு கபாலீசுவரர் ஆலய வழிபாடுகளும் திருவிழாக்களும்
—டாக்டர் சு. இராஜசேகரன்

பன்னிரு ஆழ்வார்கள்
—பருத்தியூர் டாக்டர் கே. சந்தானராமன்

அலங்கார நாயகன்
—கம்பன் கவிநயமணி வே. தியாகராஜன்

நாலாயிர திவ்வியப்பிரபந்த நயவுரை
—டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன்



இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு



193447

# திருநாவுக்கரசர்

டாக்டர் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்

உலகங்கள் பல; அவைகளில் வாழும் உயிர்களும் எண்ணில்லாதன.

மக்களைப் பிரிவினை செய்பவர் ஆண், பெண்; கற்றவர் கல்லாதவர்; பணக்காரர் வறியவர் என்று பிரித்துக் கூறுவார்கள்.

அகில லோகத்திலும் உள்ள உயிர்கள் அனைத்தையும் இரண்டாகப் பிரிக்கவேண்டுமாயின் எப்படிப் பிரித்துக் கூறுவது? உயிர்கள் என்றால் மனிதன் ஆடு, மாடு, புலி, எலி, ஆனை பூனை, பாம்பு, பல்லி, தேவர், சித்தர் இப்படி எத்தனையோ வகைப்பட்ட உயிர்கள் இருக்கின்றன. அவைகள் அத்தனையும் ஒருங்கே வைத்துச் சிந்தித்து ஆன்றோர்கள் இரு பகுப்பாகப் பிரித்தார்கள்.

ஒன்று நாவினால் பேசுகின்ற உயிர்கள்; மற்றொன்று நாவினால் பேசாத உயிர்கள், பேசுகின்ற உயிர்கள் உயர்திணை. பேசாத உயிர்கள் அஃறிணை.

உயர்வு தாழ்வு என்றுதான் கூறுவது மரபு. தாழ்திணை என்று கூறவேண்டும். தாழ்ந்தவனைத் தாழ்ந்தவன் என்று கூறினால் அவன் மனம் வருந்தும். பிறர் மனம் நோகப் பேசுவது கருணையாகாது. ஆகவே உயர்வு அல்லாத திணை என்ற பொருளில் அஃறிணையென்றார்கள்.

உயிர்களில் உயர்வு எதனால் வருகின்றது? வாய் திறந்து பேசுவதனால் வருகின்றது. மனிதன் பேசுகின்றான். அதனால் உயர்திணையாகின்றான்.

மனிதனைவிட வலிமையுடையவை சிங்கமும் புலியும், மனிதனைவிடச் செய் தொழிலில் வல்லவை சிலந்தியும் வான் குருவியும்; மனிதனைவிட நன்றியறிவுடையது நாய்; இவை அனைத்தும் அஃறிணைகளே.

ஆகவே உயர்வு, வலிமையாலும், தொழிலாலும், ஒருகாலும் இல்லை. பேச்சினால் அமைகின்றது. பேசுவது வாயன்று நா.

மனிதனுடைய நாக்கு மென்மையாக வளைந்து தரும் இயல்புடையது. அதனால் மனிதன் இனிது பேசுகின்றான். நாவிலே நீர் ஊறியவண்ணம் உளது. சொல் இனிமையால் அமையவேண்டும். எனவே உயர்வு நாவினால் ஏற்படுகின்றது.

ஒவ்வொரு தொகுதிக்குத் தலைவன் வேண்டும். ஒவ்வொரு கட்சிக்குத் தலைவர்கள் இருக்கின்றார்கள். தலைவனை அரசன் என்பது மரபு.

பர்வதங்கட்கு அரசன் (இமவான்) - மலையரசன்
மரங்களுக்கு அரசு - அரசமரம்
நாகங்களுக்கு அரசு (ஆதிசேடன்) - நாகராஜா
யானைகட்கு அரசு (ஐராவதம்) - கஜராஜா.
தேவர்கட்கு அரசு (இந்திரன்) - தேவராஜா
தியாகிகட்கு அரசன் - தியாகராஜா
பறவைகட்கு அரசு (கருடன்) - பட்சிராஜா
விலங்குகட்கு அரசு (சிங்கம்) - மிருகராஜா
நதிகட்கு அரசு (கடல்) - சமுத்திரராஜா
அகில உலகங்களிலும் உள்ள நாவுகட்கெல்லாம் அரசு — நாவுக்கரசர்.

இங்கே சிந்திக்க வேண்டியது ஒன்றுளது. குருநாதர் ஒருவர் உளர் என்றால், அறிவில்லாத ஒருகோடி மூடர்கட்குக் குரு என்றால் அவருக்குச் சிறப்பு கிடையாது.

பண்டிதர்களான பதினாயிரம் சீடர்கட்கு குரு என்று இருத்தலே பெருமை.

அது போல் வெறும் நாவுகட்கு அரசு அன்று, சீரும் சிறப்பும் பொருந்திய திருநாவுகட்கு அரசர் ஆதலால் திருநாவுக்கரசர்.

உலகம் எப்பொழுது தோன்றியதோ தெரியாது. கோடிக் கணக்கான யுகங்களாக உலகம் உளது. இந்த உலகங்கள் பல. அவைகளில் உள்ள உயிர்கள் எண்ணத் தொலையாதன. அந்த உயிர்களில் உயர்ந்தவை உயர்திணை. உயர் திணையில் வெறுநாவுடையவர் பலர். திருநாவுடையவர்கட்கெல்லாம் அரசராக ஒருவரே யமைந்தார். அவர்தான் தென் தமிழ்நாட்டில் திருவாமூரில் பழந்தமிழ்க் குடியில் புகழனாருக்கும் மாதினியாருக்கும் அருந்தவப் புதல்வராக அவதரித்த மருணீக்கியார் என அறிக.

JL



இவருக்குத் திருநாவுக்கரசர் என்று பட்டந் தந்தது யார்? ஒரு சங்கத்தார் அன்று; அவருடைய சீடர்களன்று. அகில வுலக நாயகராகிய சிவபெருமானே திருநாவுக்கரசு என்று அழைத்தார்.

எத்தனையோ கோடி உலகங்களில் கோடானு கோடி உயர்திணையான உயிர்கட்கெல்லாம் இவர் ஒருவரே அரசர் என்று சகல லோகநாயகன் கூறினான் எனில் திருநாவுக்கரசரது பெருமை ஏட்டிலும் பாட்டிலும் அடங்குமோ!

அதனால்தான் சேக்கிழார் பெருமான்

''திருநாவுக் கரசுவளர் திருத்தொண்டின் நெறிவாழ
வருஞானத் தவமுனிவர் வாகீசர் வாய்மைநெறி
பெருநாமச் சீர்பரவ லுறுகின்றேன் பேருலகில்
ஒருநாவுக் குரைசெய்ய ஒண்ணாமை யுணராதேன்''

என்று வியந்து அயர்ந்து நிற்கின்றார்.

தேனாகத் தித்திக்கின்ற வாக்குடையவர் திருநாவுக்கரசர். அவருடைய திருவடியை மறவாமல் சிந்தித்தால் நமக்கு நாவன்மை யுண்டாகும்.

காலால் நடக்கும் நாம், நாவாலும் நடக்க வேண்டும்.

'நாமேல் நடவீர் நடவீர் இனியே'

என்கின்றார் அருணகிரியார்.


அப்பர் பெருமான் அமுதவாக்கில் இருந்து வந்த தேனினும் இனிய செந்தமிழ்ப் பாடல்களில் ஒன்று இங்கே தருகின்றேன்.

''தேனோக்கும் கிளிமழலை உமைகேள்வன் செழும்பவளந்
தானோக்கும் திருமேனித் தழலுருவாம் சங்கரனை
வானோக்கும் வளர்மதிசேர் சடையானை வானோர்க்கும்
ஏனோர்க்கும் பெருமானை என்மனத்தே வைத்தேனே''

கிளி கொஞ்சுவதுபோல் என்பார்கள். எம் பெருமாட்டி உமாதேவியார் கிளிபோல் கொஞ்சிக் கொஞ்சிப் பேசுவார்.

பெரிய இசை வித்வான்கள் பாடினால் இளம் இசைவாணர்கள் ஒரு புறம் இருந்து நோக்குவார்கள். ஏன்? இசை நுணுக்கங்களை தாமும் உணரும் பொருட்டு.

தித்திக்கின்ற கலைப் பொருள்களுக்கெல்லாம் அரசாகிய தேன், உமையம்மையின் பேச்சினை ஒரு புறம் ஒதுங்கி நின்று நோக்குகின்றதாம். உமையம்மையாரின் மொழியில் உள்ள இனிமையைக் கண்டுவியந்து நிற்கின்றது தேன். எனவே தேனினும் இனிய செஞ்சொல்லையுடையவர் தேவியார். இத்தகைய உமையின் கேள்வன் சிவபெருமான். எந்தப் பொருளும் சிவப்பாக இருந்தால் அழகாக இருக்கும். சிவப்பு நிறமுள்ள பெண்மணியையும் சிவப்பு நிறமுள்ள ஆடவனையும் உலகம் விரும்பும்.



சிவப்பு நிறத்திற்கு அரசு பவளம், அந்தப் பவளம் பார்க்கின்றதாம் சிவபெருமானுடைய திருமேனியை, பவளத்திலும் மேலான சிவந்த திருமேனி.

'செழும்பவளந் தானோக்குந் திருமேனித்
தழலுருவாம் சங்கரன்'

சம்-சுகம். கரன்-செய்கின்றவன். சுகத்தைச் செய்கின்ற தெய்வம் சிவமூர்த்தி.

வீட்டிலேயுள்ள இல்லறத்துக்குரிய மனைவிமார்கள் இம்மண்ணுலகத்திற்கு நாங்கள் துணைபுரிவோம் என்ற குறிப்பிட்டுக் காட்டத் தலையில் நிலாப்பிறைபோல் நிலம் நோக்கிய வண்ணம் மலர் சூடிக்கொள்வார்கள்.

சிவபெருமான் நான் விண்ணுலகத்திற்குத் துணைபுரிவேன் என்று உணர்த்திய வண்ணம், வானோக்கிய நிலாவையே முடியில் சூடியுள்ளார். அது தேய்மதி யன்று, வளர்மதியாகும்.

''வானோக்கும் வளர்மதிசேர் சடையானை'

'அவர் வானோர்க்கும் ஏனோர்க்குந் தலைவன்', அப்பரமனைப் பலர் கட்டிச் சுருட்டிக் கக்கத்தில் வைப்பர். கருத்தில் வையார். அவர்கள் பட்டப் பகலை இரவென்று கூறிடும் பாதகர்கள் ஆவார்கள். ஆதலால் அடியேன் அப்பரமனை என் மனத்தை வைத்தேனே. நெஞ்சகமே கோயிலாக அவரை வைத்திருக்கின்றேன்.

'நெஞ்சகமே கோயில் நினைவே சுகந்தம்அன்பு
மஞ்சனநீர் பூசைகொள்ள வாராய் பராபரமே'

என்றபடி அப்புனித நாயகனை என் உள்ளத்தில் வைத்திருக்கிறேன் என்கின்றார் திருநாவுக்கரசர்.

என்ன இனிய வாக்கு, கனியமுதமன்ன கரும்பினும் தித்திக்குந் தெய்வீக வாக்கு.

## தாயின் சிறப்பு

ஐயிரண்டு திங்களா அங்கமெலாம் நொந்து பெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச்—செய்யஇரு
கைப்புறத்தில் ஏந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பில் காண்பேன் இனி

—பட்டினத்தடிகள்

# அருள்மிகு கொளஞ்சியப்பர் ஆலயத்தில் நிகழ்த்தப்பெறும்

# விசேட நேர்த்திக் கடன்

டாக்டர் இரா. செல்வகணபதி. முதல்வர். தருமையாதீனக் கல்லூரி, மயிலாடுதுறை.

திருமுருகன் கோயில் கொண்டுள்ள பிரார்த்தனை திருத்தலங்களில் மிகப் புகழ் பெற்ற ஆலயமாகத் திகழும் ஆலயம் விருத்தாசலம் வட்டத்தில் அமைந்துள்ள அருள்மிகு கொளஞ்சியப்பர் ஆலயமாகும்.

ஒரு குடும்பத்தில் கடைசிப்பிள்ளையைக் 'குட்டி என்றும்' 'கொளஞ்சி' என்றும் அழைக்கும் தமிழ் மரபிற்கேற்ப சிவகுடும்பத்தின் இளைய குமரனான முருகருக்கு இங்குக் கொளஞ்சியப்பர் எனத் திருநாமம் சூட்டப்பட்டு வழிபடப் பெறுகிறது.

பக்தர்களின் வினைதீர்க்கும் வடிவேல் முருகன், இங்கு தன்னை அண்டினோரின் தீராநோய் தீர்க்கும் கண்கண்ட தெய்வமாக விளங்குகிறான். பிறரிடம் பொருள் கொடுத்து நம்பி மோசம் போனவர்களும், பகைவர்களால் துன்பப்படுபவர்களும் எழுத்து மூலம் தம் குறையைத் தெரிவித்து முறையிட, அவர்களின் கோரிக்கைகளை ஏற்று நியாயம் வழங்கும் நீதி தேவனாகவும் அருள்மிகு கொளஞ்சியப்பர் அருள்புரிவது இத்திருத்தலத்திற்கே உள்ள தனிப்பெருஞ் சிறப்பு எனலாம்.

அருவும் உருவும் ஆகிக் கைதொழுவார் கவிதீர்க்கும் கண்கண்ட கடவுளாக விளங்கும் அருள்மிகு கொளஞ்சியப்பர் ஆலயத்தில் நடைபெறும் சிறப்பு நேர்த்திக் கடன் வைபவத்தை இக்கட்டுரை வாயிலாகக் காணலாம்.

### பராய்க் கடன்


தமிழ் மக்களின் கடவுள் பக்தி பெரிதும் உறுதி மிக்கது. எத்தகைய வாதப் பிரதிவாதங்களாலும் அவர்கள் குருதியோடு கலந்துள்ள இறையன்பை மாற்றுதல் இயலாது. 'அஞ்சியாகிலும், அன்பு பட்டாகிலும் நெஞ்சமே நீ நினை' என்ற ஆன்றோர் வாக்கிற்கு ஏற்பத் தமிழ் மக்கள் நெஞ்சம் பயபக்தியோடு இறைவனை வேண்டும் போதெல்லாம் இன்னது தந்தால் இன்னது செய்வேன் என வேண்டிக்கோடல் தமிழர் வழிபாட்டு மரபு. இதனைப் பராய்க் கடன் எனச் சங்க இலக்கியங்கள் பேசும். நேர்த்திக் கடன் என்பது பிற்கால வழக்கு. நேர்த்திக் கடனைக் குறித்த காலத்தில் முறையாக நிகழ்த்துவதில் தமிழர் விழிப்போடு செயற்படுவர். தெய்வக் குற்றம் வரலாகாது என்பதில் அவர்கள் கண்ணும் கருத்துமாகவும் இருப்பர்.

### இருவகை நேர்த்திக் கடன்

தமிழர்கள் நேர்த்திக்கடன் செய்தல் இருவகையாக அமையும், முன்னரே ஒன்றை நேர்த்திக் கடனாகச் செய்து விட்டு, இன்னதை அருள் என ஒன்றை வேண்டுதல் ஒரு வகை. இதனை நீ எனக்கு அருளினால் பின்னர், இவ்வாறான நேர்த்திக்கடன் நான் செய்வேன் என வேண்டி, விழைவு நிறைந்த பின்னர்க் கடன் செலுத்துதல் மற்றொரு வகை. இவ்விருவகையிலும் தமிழ்மக்கள் பல்வேறு தெய்வங்களுக்கு செய்யும் நேர்த்திக்கடன்கள் இடத்துக்கு இடம் மாறுபடும். சிலவகை நேர்த்திக் கடன் எளிதாக அமையும். சிலவகை நேர்த்திக் கடன் அச்சமூட்டுவனவாக அமையும். இவற்றில் எல்லாம் தமிழ் மக்களின் அளப்பரிய பக்தி வைராக்கியத்தை இனங் காணலாம்.

### எத்தனை வகை

மஞ்சள் துணியில், கையில் கிடைத்த காசைச் சுற்றி வைத்துப் பின் ஒரு நாள் உண்டியலில் சேர்ப்பர். பொன்னாலும், வெள்ளியினாலும், உடல் உறுப்புக்கள் செய்து வழங்குவர், உப்பும் மிளகும் வாங்கிக் கொட்டுவர். வெல்லத்தை நீரில் கரைப்பர். கஞ்சி காய்ச்சி ஊற்றுவர். மாவிளக்கு இட்டு நெய்த்தீபம் ஏற்றுவர். முடியிறக்குவர். அங்கப் பிரதிட்டணம் செய்வர். பல்வேறு காவடிகள் எடுப்பர். வெவ்வேறு நாள்களில் உண்டிகுறைத்து விரதம் மேற்கொள்வர். நெருப்புக்குழி அமைத்துத் தீமிதிப்பர். ஆடு வெட்டுவர். கோழி அறுப்பர், எருமைக்கடாவெட்டுவர். தென்னம்பிள்ளை சார்த்துவர், விலங்குகளையும் தானியங்களையும் காணிக்கை வைப்பர். கோயில் சமைப்பர். திருமேனி செய்து பிரதிட்டை செய்வர். விளக்கிடுவர். தானம் அளிப்பர். தமிழர் நேர்த்திக்கடன்கள் இவ்வாறு பலப்பல.








மணவாளநல்லூரில் கோயில் கொண்டு அருள் வழங்கும் குறிஞ்சித் தலைவனாகிய கொளஞ்சியப்பருக்கு நிகழ்த்தப்படும் ஒரு வகை நேர்த்திக்கடன் பிற, இடங்களில் இல்லாத வித்தியாசமானதும் வியப்பூட்டும் தன்மையதுமாகும். கொளஞ்சியப்பர் சந்நிதியில், மகாமண்டபத்தில் இடப்பாகம் வடக்கு நோக்கிக் கோயில் கொண்டுள்ளார் அருள்மிகு மூனியப்பர். காண்பாருக்கு சற்றே அச்சம் தரும் திருமேனி. இவர் எழுந்தருளியுள்ள இடத்தின் கீழே தரை மட்டத்தில் வாழை மொட்டு போன்ற அமைப்பில் ஒரு கல்நின்றது. பல ஆண்டுகளுக்கு முன் அக்கல் அருகில் செல்வதற்கே மக்கள் அஞ்சுவர். ஒழுக்கக்குறைபாடு தவறு இழைத்தல்-தீட்டு உடையோர் அருகில் சென்று அதனை உற்றுப் பார்த்தால் சிலருக்குச் சிரிப்பது போல் தோன்றும். சிலருக்கு அச்சமூட்டும். சிலர் அலறிப்புடைத்து ஓடும்படிசெய்யும். சிலர் கண்டு நடுங்கி குளிர்சுரத்திற்கு ஆளாவர். இன்று அக்கல் இருந்த பகுதி மூடப்பட்டுள்ளது. அருள்மிகு முனியப்பர் அருகில் காட்சி தருகிறார். அவர் சந்நிதிக்கு நேர் எதிரேமுன்னரே குறித்தவாறு கல்லாலும், இரும்பாலும் இயற்றப்பட்ட நூற்றுக்கு மேற்பட்ட முத்தலைச் சூலங்களும், குத்தீட்டிகளும், பிறவகை அம்புகளும் மேல் நோக்கியவாறு நெருக்கமாக நட்டு வைக்கப் பெற்றுள்ளன.

### நீதி வேண்டுதல்

ஒருவரின் பொருள் களவு போய்விட்டால் ஒருவர் தம் உடைமைகளை மற்றவர் அபகரித்துக் கொண்டால், தமக்கு ஒருவர் தீங்கு செய்தால், அடித்தால் துன்புறுத்தினால் நீதி வேண்டி முன்பெல்லாம் ஊர்ச்சபையில் வழக்கு தொடருவர். அரசர்கள் காலத்தில் நீதி வேண்டி மன்னர்க்கு விண்ணப்பம் செய்வர். தற்காலத்தில் வழக்கின் தன்மைக்கு ஏற்ப காவல் நிலையத்திலும், நீதிமன்றத்திலும் தம் குறை நீங்க ஆவண செய்ய எழுத்து மூலம் வேண்டுகோள் வைப்பர். கொளஞ்சியப்பர் அருள் வழங்கும் கருணையாளன். வேண்டுவார்க்கு வேண்டுவன வழங்கும் அருட்கொடையாளன். தம் அன்பர்களைத் துன்பறுத்துவார்க்கு உரியதண்டனை வழங்கும் நீதிஅரசன். அருட்கருணையோடு, மறக்கருணையும் வழங்கும் மாண்பினன்,

### பிராது கட்டுதல்

தம் குறை முடிக்க வேண்டி 'பிராது கட்டுதல்' என்ற நேர்த்திக்கடன் இங்கே மிகவும் புதுமையாக உள்ளது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் வந்த சொல் வழக்குகளில் ஒன்று 'பிராது கொடுத்தல்' என்பது. ஒருவர் மேல் ஒரு வழக்கை எழுத்து வடிவில் நீதி மன்றத்தில் பதிவு செய்தலை இத்தொடர் குறிக்கும். மணவாளநல்லூரில் தம் குறை முடிக்க வேண்டிக் கொளஞ்சியப்பரிடம் பிராது கட்டுதல் என்ற வழக்கம் இன்றும் மிகுதியாக உள்ளது. பிராது கட்டுதல் வழக்கு நோக்கில் மட்டுமல்லாது, ஒரு குறை முடிக்க வேண்டியும் இங்கே அமைகிறது. பொருள் களவு போய்விட்டாலோ கொடுத்த கடன் திரும்பாவிட்டாலோ, பிறர் தம்மை வஞ்சித்து விட்டாலோ, கடும் நோயால் அவதி உற்றாலோ, குடும்பப் பிரச்சனைகளால் வாடினாலோ, மகனுக்கோ, மகளுக்கோ திருமணம் தடைப்பட்டாலோ, வேலை கிடைக்கா



மல் வறுமை உற்றாலோ, வேறு யாதொன்று வேண்டி நின்றாலோ யாவற்றையும் இங்கே பிராது கட்டி விண்ணப்பித்துக் கொள்ளலாம்.

### கட்டணங்கள்

நீதிமன்றத்தில் பிராது கொடுத்தால்-பிரதிவாதிக்குச் சம்மன் அனுப்புவர். ஊரைக்கூட்ட தமுக்கு முழக்கி நகர்க்கு அறிவிப்பர். இவற்றிற்கான கட்டணத்தைப் பிராது கொடுப்பவர் செலுத்த வேண்டும். கொளஞ்சியப்பராகிய நீதி அரசர் முன் சம்மன் கட்டுவதற்குக் கட்டணம் உண்டு. இங்கே பிராதுக் கட்டணம்ரூபாய் ஏழும், பைசா பத்தும் ஆகும். இத்தொகை 1. பிராதுக்கட்டணம், 2. சம்மன் கட்டணம் 3. டாம்டாம் (தமுக்கு) கட்டணம் ஆகிய மூன்றிற்கும் சேர்ந்ததாகும். இக்கட்டணத்துடன், பிராது கட்டுபவர் எந்த ஊரில் இருந்து மணவாளநல்லூர் வருகிறாரோ, அந்த ஊருக்கும் மணவாளநல்லூருக்கும் இடையே உள்ள தூரத்தைக் கிலோ மீட்டரில் கணக்கிட்டு ஒரு கிலோ மீட்டருக்கு பத்துகாசு வீதம் தமுக்குக் கட்டணத்தோடு சேர்த்துக்கட்டி, அலுவலக ரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.

### எப்படி பிராது கட்டுவது

பிறகு பிராது வாசகத்தை ஒரு வெள்ளை தாளில் கீழ்க்கண்டவாறு தொடங்கி எழுத வேண்டும்.

'மணவாளநல்லூர் அருள்மிகு கொளஞ்சியப்பர் திருப்பாத கமலங்களைப் பணிந்து—தஞ்சாவூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், வடபாதிமங்கலத்தைச் சேர்ந்தஇராமசாமிப் பிள்ளை குமாரனாகிய சண்முகமாகிய நான் என்னுடைய குறைகளைக் கீழ்க்கண்டவாறு பிராது மூலம் திருவடிகளுக்கு விண்ணப்பித்துக் கொள்கிறேன்.''

என்று தொடங்கி முடிக்க வேண்டிய குறைகளை அடுத்து எழுதி, நிறைவாகக் கையொப்பம் இட்டு, தேங்காய், பழம் முதலியவற்றோடு ஒரு அர்ச்சனைத் தட்டில் இப்பிராதுக் கடிதத்தையும் மடித்து வைத்துக் கொளஞ்சியப்பர் சந்நிதியில் சிவாசாரியரிடம் வழங்க வேண்டும். அவர் அர்ச்சனை செய்து, பிராதுக் கடிதத்தைச் சுவாமி பாதத்தில் வைத்து வழிபட்டு பிரசாதத்துடன் மீண்டும் நம்மிடம் தருவார். நாம் அக்கடிதத்தைப் பலவாறு குறுக்கும் நெடுக்குமாக மடித்து, ஒரு சிறு விபூதிப் பொட்டலம் போல் ஆக்கி, சிறு நூலால் கட்டி, அதனை முனியப்பர் சந்நிதியில் இருக்கும் வேலில் ஒரு நூலால் கட்டித் தொங்க விட்டு விட்டு விடை பெறலாம். கொளஞ்சியப்பர் அருள், அவரவர் நல்வினைக்கு ஏற்ப மூன்று மணி நேரத்திலோ மூன்று நாளிலோ, மூன்று மாதத்திலோ வெளிப்படும். பிராது கட்டியவர் எண்ணம் நிறைவேறும். இன்றும் இங்கேபிராது கட்டுபவர்கள் தொகை ஏராளம், நலம் பெற்றவர்கள் ஆயிரம் ஆயிரம். ஆண்டொன்றுக்கு இவ்வகையில் கட்டணமாகவே ஒரு லட்ச ரூபாய்க்கு மேல் திருக்கோயிலுக்கு வருவாய் அமைகிறது எனின் பிராது கொடுப்பார் தொகையை ஒருவாறு அறிய இயலும். எண்ணம் நிறைவேறியபின் பிராதை எழுத்து மூலம் மீண்டும் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு கொளஞ்சியப்பரிடம் பிராது கட்டிக் கைமேல் பலன் பெற்ற அன்பர்களின் அனுபவங்கள் மெய்சிலிர்க்க வைப்பன, அவற்றை ஒன்று திரட்டினால் அவையே ஒரு நூலாகும். சென்னையைச் சார்ந்த அன்பர் ஒருவர்-சந்தர்ப்ப சூழ்நிலையால் உத்தமியாகிய தம் மனைவியின் நடத்தையில் சந்தேகம் கொண்டார். அது பூதாகாரமாக உரு வெடுத்தது. பிணக்கு முற்ற இருவரும்பிரிந்து போயினர். விவாகரத்து வரை பிரச்சனை எல்லை கடந்தது. குற்றமற்ற மனைவியார்க்கு யாரோ ஒரு அன்பர் மணவாளநல்லூரில் பிராது கட்டிப்பார்க்க நெறிப்படுத்தினார். நம்பிக்கையோடு அவ்வம்மையார்பிராதுகட்டி, நெஞ்சுருகிக் கண்ணீர் மல்கக் கொளஞ்சியப்ப ரைப் பிரார்த்தித்துத் துன்ப மேகம் அகலும், துயர்தீரும் என்று நம்பிக்கையுடன் திரும்பி னார். பழிக்கஞ்சிச் சொக்கனின் திருக்குமாரன் ஒரு பெண்ணுக்குற்ற பழியைத் தரியாது விரைந்து அருளினான். கணவர் ஐயம் தகர்ந் தது. கணவன் மனைவி இணைந்தனர். ஒரு மகனும் பிறந்தான். மூவரும் மீண்டும் மண வாளநல்லூர் வந்து, ஒரு வேல் வாங்கிக் கொடுத்து கொளஞ்சியப்பரை வாழ்த்தி வணங்கிச் சென்றனர்.

### தவறுக்குத் தண்டனை

தந்தை - மகன் உறவு எத்துணை உன்னத மானது! அந்த உறவு முறை இன்று தறி கெட்டு நிற்கிறது. தந்தைக்கு உபதேசித்த தகப்பன்சாமி முருகன்-என்றாலும் ஐயன் அருள் பெற்றே அவன் சூரசம்காரத்திற்கு எழுந்தருள்வதை இன்றும் ஐதிக விழாவாக நாம் கண்டு மகிழ்வோம். மாதா, பிதா, குரு, தெய்வம் என்பது ஆன்றோர் அருள் மொழி. சில ஆண்டுகளுக்கு முன்பு,ஒரு தந்தை கொளஞ் சியப்பருக்கு முன் நின்று கண்ணீர் சிந்தினார். கசிந்து அழுதார். அவர் உற்ற குறை என்ன தான் தெரியுமா! பெற்ற மகன், தந்தையைப் பகைத்து, தோளிலும் மார்பிலும் தூக்கி வைத்துக்கொண்டு,இரவெல்லாம் கண்விழித்து வளர்த்த தந்தையையே கைநீட்டி அடித்தும் விட்டான், கொளஞ்சியப்பா நீ கேள் என்று தந்தை பிராது கட்டினார். வீடு திரும்பிப் பார்த்தால் எந்தக்கை தந்தையை அடித்ததோ அந்தக் கை வாதத்தால் முடங்கிப் போய்- இழுத்துக் கொண்டது. அருள் வழங்கச் சற்று காலம் நீடித்தாலும், தவறுகளுக்கு தவறாது தண்டனை வழங்கும் கொளஞ்சியப்பன் அருள் பாடு அவனுக்குத் தெரிந்தது.

### நோய் நீக்கி அருளியது.

பெண்ணாடம் அன்பர் ஒருவர் கொளஞ்சி யப்பரின் பக்தர், பழவினைப் பயனால் அவர் துணைவிக்குத் திடீரென ஒரு நாள் பைத்தியம் பிடித்தது. பார்க்காத மருத்துவம் இல்லை. செல்லாத கோயில் இல்லை. நோய் நாளும் நாளும் கூடிற்றே அன்றிக் குறைந்தபாடில்லை. கலங்கிய அன்பர்க்குக் கொளஞ்சியப்பருக்குப் பிராது கட்டும் எண்ணம் வந்தது. வணங்கிக் கட்டினார். பைத்தியம் தெளிந்தது. கொளஞ் சியப்பர் அருள் கூடி வந்தது. துணைவியோடு வந்து வழிபட்டுக் காணிக்கை செலுத்திச் சென் றார்.

சென்னை அன்பர், திரு. சி. ஆர். சுப்பிர மணியம் என்பவர் நீண்டநாள் தடைப்பட்டுக் கொண்டே வந்த தம் இருமகள்களின் திரு மணம் விரைந்து நடக்க அருளுமாறு பிராது கட்டினார். மிக விரைவில் திருமணம் கூடி வந்தது. பெண்கள் மண வாழ்வு பெற்று மகிழ்ந்தனர். இன்றும், திருமணம் ஆகாத வர்க்கு உடன் திருமணம் கூடிவரவும், வேலை அற்றார்க்கு வேலைவாய்ப்பு அமையவும் கட்டப்படும் பிராதுகளே மிக அதிகம்.

---

## வைத்தியநாத மருந்து

### சுவாமி சரவணபவானந்தர்

இராகம்—செஞ்சுருட்டி
தாளம்;—ரூபகம்

எடுப்பு

மருந்தோ மருந்து!—நல்ல
மருந்தோ மருந்து;—அருள்
(மருந்தோ)

வள்ளல் எனச் சொல்லும்
வயித்திய நாதர்
அள்ளி வழங்கிடும்
புள்ளிருக்கு வேளூர்
(மருந்தோ)

தொடுப்பு

அருந்தச் சுகந்தரும் அற்புத மருந்து
ஆயிரம் நோய்களை அகற்றும் மருந்து

ஆய துணைவி தையல் நாயகியுடன் அமைந்து
அன்பர்க் கென்றே செய்த இன்பத் தமிழ் மருந்து

முடிப்பு

சுக்கில பட்சத்தில் தொடங்கிய மருந்து
கந்த சித்தாமிர்தத் தீர்த்த மருந்து
துஞ்சல் இல்லாமலே அஞ்செழுத்தோதி
தொண்டுடன் குண்டத்து நீற்றையும்கலந்தே

தக்க பக்குவமுடன் வில்வமும் சேர்த்தே
சாரும் குழிஅம்மி தன்னிலிட்டரைத்தே
சாத்துண்டை யாக்கியே தாயின் மடியில் வைத்து
சகல பிணியும் தீரத் தரும் ஞான மருந்து
(மருந்தோ)



# திருவருள் சுரக்கும் திருவாஞ்சியம்

புலவர் பொன். திருக்கண்ணபுர சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எட்.,

மேவிலொன்றர் விரிவுற்ற இரண்டினர்
மூன்றுமாய்
நாவின்நா லர் உடலஞ்சினர்ஆறர்ஏழோசையர்
தேவில்எட் டர்திரு வாஞ்சியம் மேவிய
செல்வனார்
பாவந்தீர்ப்பர் பழி போக்குவர் தம்அடி
யார்கட்கே.

—திருஞான சம்பந்தர்

அற்றுப் பற்றின்றி யாரையு மில்லவர்க்
குற்ற நற்றுணை யாவா னுறைபதி
தெற்று மாடங்கள் சூழ்திரு வாஞ்சியம்
கற்றுச் சேர்பவர்க் குக்கருத் தாவதே

—திருநாவுக்கரசர்

ஸ்ரீவாஞ்சியம் என்று மக்கள் நாவாரப் புகழ்ந்தேத்தும் இந்த தேவாரப் பாடல் பெற்ற சிவத்தலம் நாகை காயிதேமில்லத் மாவட்டத்தில் நன்னிலம் பகுதியிலிருக்கிறது. மயிலாடுதுறை-அறந்தாங்கி இருப்புப்பாதையில் நன்னிலம் புகை வண்டி நிலையத்திற்கு மேற்கே ஏழு கல் தொலைவிலிருக்கிறது. நன்னிலத்தில் இருந்து பேருந்துகள் மூலம் சென்று வழிபடலாம். இவ்வூர் புத்தாற்றின் வடகரையிலிருக்கிறது.

திருமால் தம்மை விட்டுப் பிரிந்து போன இலட்சுமியை இவ்விடத்தில் பெற்றார். திருவாகிய இலட்சுமியை மகாவிஷ்ணு வாஞ்சித்ததால் திருவாஞ்சியம் என்று இத்தலத்திற்கு பெயர் வழங்கலாயிற்று.

சிவபெருமான் திருக்கோயில் கிழக்கு நோக்கியிருக்கிறது. நான்கு பக்கமும் திரு வாயில்கள் உள்ளன. மேற்கு வாசல் உபயோகத்தில் இல்லை. கீழவாசலில் அழகிய கோபுரம் இருக்கிறது. கோயிலுக்குள் மூன்று பிரகாரங்கள் இருக்கின்றன. வெளிப் பிரகாரத்தின் தென்கிழக்கு மூலையில் எமதருமராஜன் தெற்கு நோக்கியிருக்கிறது. இது இத்தலத்திற்கே தனிச்சிறப்புடையது. இவ்வூரில் இறந்தவர்களுக்கு எமவாதனை இல்லையென்றும், எந்த ஜீவனும் இறக்கும்போது வலது காது மேற்புறம் இருக்கும்படி கிடக்கும் என்றும் பரமசிவம் பஞ்சாட்சர உபதேசம் செய்கிறார் என்றும் சொல்லப்படுகிறது. எமன்தான் உயிர்களுக்கு இம்சை கொடுக்கும் பணியினின்றும் விலக வேண்டி இறைவனை நோக்கித் தவம் கிடக்க, அவர் இத்தலத்தில் பஞ்சக் குரோச எல்லையளவு எமவாதை இல்லாமற் போக வேண்டுமென்று அருள் புரிந்தார் என்று கூறப்படுகிறது.

வெளிப்பிரகாரத்திலிருந்து இரண்டாவது உட்பிரகாரம் செல்லும் வாயில் மேலும் ஒரு கோபுரம் உண்டு. அதன் இருமருங்கும் விநாயகர், முருகன் சந்நிதிகள் இருக்கின்றன. இரண்டாவது பிரகாரத்தின் வடகிழக்கு மூலையில் அம்பிகையின் தனிக் கோயில் தெற்கு நோக்கியிருக்கிறது. அம்பாளின் திருப்பெயர்கள் வாழ வந்த நாயகி, மங்களாம்பிகை என்பன. மூன்றாவது திருவாயிலையும் கடந்து சென்றால் தென்புறம் வெண்ணெய்ப் பிள்ளையார் சந்நிதியிருக்கிறது. மேற்குப் பிரகாரத்தில் முருகன், கலைமகள், திருமகள் சந்நிதிகள் இருக்கின்றன. இவை திருவெண்காடு, திருவையாறு, திருமயிலாடுதுறை, திருவிடைமருதூர், திருச்சாய்க்காடு இத்தலங்களின் மூர்த்திகளைக் குறிக்கும். தென்னாட்டில் காசிக்குச் சமமாகச் சொல்லப்படும் தலங்கள் ஆறு. அவை மேற்கண்ட ஐந்துடன் திருவாஞ்சியத்தையும் சேர்க்க ஆறு ஆகும். மூன்று காரணங்களால் காசியைவிட இத்திருவாஞ்சியத்திற்கு மகத்துவம் அதிகமென்று கூறுகின்றனர். காசியில் வசிப்பவர்களுக்குப் புண்ணிய பாவங்கள் விருத்தியாகும். இங்கே வசிப்பவர்களுக்குப் பாவம் குறைந்து புண்ணியம் அதிகம் ஆகும். காசியில் இறப்பவர்களுக்கு முக்தியுண்டு. ஆனால் பைரவதண்டனையுண்டு. இங்கே கிடையாது. கங்கை இங்கே முனி தீர்த்தத்தில் 999 பாகம் இரகசியமாக வசிக்கிறாள். காசியில் ஒரு பாகம்தான் இருக்கிறாள். இத்தலத்தில் பைரவர் அமர்ந்த கோலத்தில் காணப்படுகிறார். ஆசினபைரவர் என்று அவருக்குப்



## வாழ்க வளமுடன்

ஒவ்வொருவரும் காலையில் எழுந்தவுடன் வாழ்க வையகம், வாழ்க வளமுடன் என்று வாழ்த்த வாழ்த்த, அந்த வாழ்த்து அலை உலக மனித சமுதாயத்தில் அவர்கள் அறிவிலே பதிவாகி பிரதிபலித்து காலத்தால் உலக முழுதும் அமைதியும் மகிழ்ச்சியும் நிலவிடச் செய்யும்.

—தவத்திரு வேதாந்த மகரிஷிகள்

பெயர். தண்டனை கொடுக்க வேண்டியது அவருக்குப் பெயர் பெற்ற வேலை.

இன்னும் வடக்கு உட்பிரகாரத்தில் நடராஜர், அஷ்டகஜதுர்க்கை முதலியவர்கள் சந்நிதிகளிருக்கின்றன. கர்பக்கிரகத்தில் மூலஸ்தான மூர்த்தியான வாஞ்சிநாத சுவாமி எழுந்தருளியிருக்கிறார். அவருக்கு விரோனக்னேசுவரர், பூகைலாசநாதர் என்ற பெயர்களுமுண்டு.

தலபுராணத்தில் இப்பதிக்கு இருபத்து நான்கு தீர்த்தங்கள் உள்ளதாகக் கூறப்படுகிறது. அனந்த என்ற கிணறு கோயிலுக்குள் இருப்பது. மற்றவை குளங்கள். இவைகளில் மிகவும் முக்கியமானவை குப்தகங்கை எனப்படும் முனிதீர்த்தம். இது கோயிலுக்குள் வடக்கு வெளிப் பிரகாரத்திலுள்ள பெரிய தீர்த்தமாகும். கார்த்திகை மாத ஞாயிற்றுக் கிழமைகளில் நீராடி இறைவனை வழிபட்டால் பஞ்சமா பாதகங்களும் நீங்கும். கார்த்திகையல்லாத மற்ற மாத ஞாயிற்றுக் கிழமைகளில் நீராடினாலும் நலம் பயக்கும். கார்த்திகை மாதத்தில் ஐந்து ஞாயிற்றுக் கிழமைகள் வந்தால் மிகவும் சிறப்புடையது. கார்த்திகையில் கடை ஞாயிற்றைக் கடைசி நாளாக வைத்து உற்சவம் நடைபெறும். மக்கள் திரளாக வந்து குப்தகங்கையில் முழுகி வாஞ்சி நாதரை வழிபடுகின்றனர். எமதீர்த்தம் கோயிலுக்கு வெளியில் தென்கிழக்கில் எம தருமராஜன் சந்நிதிக்கு நேராக இருக்கிறது. கோயிலில் ஆறுகால பூசை நடைபெறுகிறது. அம்பாளுக்கு ஆடிப்பூரமும், மாசியில் பிரதான பிரம உற்சவமும், கார்த்திகை ஞாயிற்றுக் கிழமைகளிலும் திருவிழாக்கள் உண்டு. எம தருமராஜன் வாகனத்தில் இறைவன் எழுந்தருள்வது தனிச் சிறப்பானது. இத்தலவிருட்சம் சந்தனமரம்.

திருவாஞ்சியம் சமயக்குரவர் நால்வராலும் பாடல் பெற்ற பெருமையுடையது. திருஞானசம்பந்தர் பதினொரு (பாடலுடைய) பாசுரங்களுடைய ஒரு பதிகம் பணித்தருளியிருக்கிறார். 'தென்னவென்று வரிவண்டு இசைசெய் திருவாஞ்சியம்' 'பண்ணிலான இசைபால்மல்கு திருவாஞ்சியம்' 'பரவுவார் வினை தீர்க்க நின்றார் திருவாஞ்சியம்' என்பன போன்றவற்றைக் கூறுகிறார்.

திருநாவுக்கரசர் அருளிய ஒரு பதிகத்தில் ஏழு பாடல்களேயுள்ளன. பற்றற்றவர்க்கு உற்ற நற்றுணை இறைவனேயென்றும் உற்ற நற்றுணையாம் இறைவனை அடைபவர்க்கு அல்லல் ஒன்றுமில்லையென்றும், அதனால் திருவாஞ்சியம் சென்று சேர்மின் என்றும் அறிவுரைகள் பல பகர்கின்றார்.

சுந்தரர் பாடியருளியது பத்துப் பாடல்களையுடைய ஒரு பதிகம். திருவாஞ்சியத்தின் இயற்கை வளத்தைப் பாங்குடன் புனைந்து காட்டுகிறார் 'வாஞ்சியத்தடிகள்' விளங்கு தாமரைப்பாதம் நினைப்பவர் வினை நலிவிலரே' என்றும், 'வாஞ்சியத்துறையுமொருவனாரடியாரை ஊழ்வினைநலியவொட்டாரே' என்றும் கூறுகிறார்.

''திருவாஞ்சியத்தில் சீர்பெற இருந்து மருவார் குழலியோடு மகிழ்ந்த வண்ணமும்.'' என்று மாணிக்கவாசகர் பாராட்டுகிறார். இத்தலத்திற்கு அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ் பாடலொன்றும் உண்டு. 'இபமாந்தர்' என்று தொடங்குவது அப்பாடல். 'திரை பாய்ந்த பத்ம தட வயலியல் வேய்ந்த முத்தியருள்தரு திருவாஞ்சியத்திலமரர்கள் பெருமானே' என்று முடிக்கிறார்.

ஸ்ரீவாஞ்சியசேத்திர புராணம் என்ற வடமொழிப் புராணத்தை 1908-ஆம் ஆண்டில் அச்சிட்டிருக்கின்றனர். அதிலிருந்து இத்தல மகிமையை ஸ்காந்த புராணம், ஸாம்போப புராணம், ஆக்னேய புராணம் இவைகளில் கூறப்பட்டிருப்பதாகத் தெளிகிறது. இந்த வடமொழி நூலை எல்லோரும் அறிந்து கொள்ளும் பொருட்டு 1939-ல் தமிழில் உரைநடையாக அச்சிட்டு வெளியிடப் பெற்றிருக்கிறது. அதில் அறுபத்தொரு அத்தியாயங்கள் இருக்கின்றன. பல அரிய செய்திகளையும் நிகழ்ச்சிகளையும் காணலாம். இறைவனுடைய பெருமையும், கார்த்திகை ஞாயிறுகளில் குப்த கங்கையில் நீராடுவதால் அடையும் பயனையும்

பிரம தீர்த்தம், சர்வ தீர்த்தம், அக்கினி தீர்த்தம், இந்திர தீர்த்தம்,, இலக்குமி தீர்த்தம், சக்கர தீர்த்தம், விரக தீர்த்தம், தேவ தீர்த்தம் இவைகளின் மகிமையையும் மிகவும் விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

களந்தைக்குமரன் என்பவர் தலபுராணச் செய்யுள் நூல் ஒன்று இயற்றிருக்கிறார். இவருடைய வரலாறு தெரியவில்லை. அதில் பாயிரம் முதல் திருவிழாச்சருக்கம் ஈறாக பதினேழு சருக்கங்கள் உள்ளன. பாடல்களின் தொகை 828. நூலாசிரியர் சகாத்தம் 1538-ல் இப்புராணம் பாடியதாகக் கூறியிருக்கிறார். இந்நூல் 1959-ஆம் ஆண்டில் திருக்கோயிலாரால் அச்சிட்டு வெளியிடப் பெற்றிருக்கிறது. அதிலிருந்து எடுத்துக் காட்டாக ஒரு பாடல்.

''அருவமென உருவமென அருவுருவ
மெனலாகி யகண்ட் மாகிப்
பொருவரிய மறைகளினா அளவையினால்
அறியவரும் பொருள தாகி
மருவரு மிறுதிநடு வொப்பிகந்து
மூப்பிளமை மாசொன்றின்றி
ஒருமுதலா யோங்கிநிறைந் தழியாத
பரஞ்சுடரை யுள்ளத் துய்ப்பாம்''

சிவராம பிள்ளை எனபவர் 'மங்கள நாயகியம்மை பிள்ளைத்தமிழ்' என்ற நூலை இத்தலத்து அம்பிகை மீது பாடியுள்ளார். இவருடைய வரலாறும் தெரிந்து கொள்ள முடியவில்லை. ஒரு பாட்டில் 'நாமேவு புகழ் செல்வ வேளாளர்குல திலகன் முத்துமணி யீன்ற ரத்தினம் நாவலர்கள் கற்பகம் சிவராமசுந்தரன் நன்மனம் அமர்ந்தருள்வாய்' என்று தன்னைப் பற்றிக் கூறியிருக்கிறார். இந்த நூலையும் சேர்த்துத் தலபுராணத்துடன் திருக்கோயிலார் அச்சிட்டு வெளியிட்டிருக்கின்றனர். அதிலிருந்து ஒரு பாடல்

''தத்துந் தரங்கக் கடல் முத்துந் தண்ணங்
குவளை சொரி முத்துந்
தாமக் குழலார் களமுத்துந் தழைத்த
வேழந் தரு முத்தும்
வித்துஞ் சாலி விளைமுத்தம்
வெவ்வா யிடங்கர் மிசை முத்தும்
விரைசூழ் தாற்றுக் கதலி முத்தும் மேவுங்
கமடஞ் செறி முத்தும்
குத்தும் களிற்றுப் பனைமுத்தும் கூர்வெங்
கேழற் கோட்டு முத்தும்
குலவு பழுக்காய்க் கந்தி முத்துங் குடகா
விரியிற் றுறையில் வளை
முத்தும், பழிக்கும் நினது செவ்வாய்
முத்தந் தருக முத்தமே''.

இப்பாடல் பகழிக்கூத்தர் இயற்றிய திருச்செந்தூர் பிள்ளைத் தமிழிலுள்ள 'கத்துந்தரங்கம்' என்று தொடங்கும் முத்தப் பருவப் பாடலை அடியொற்றிச் செல்வது கண்டு மகிழத்தக்கது.


நால்வரும் பாடியிருக்கும் மேன்மை பெற்றதாதலின் இது மிகவும் பழையகோவில் என்பதில் ஐயமில்லை. இங்குள்ள அம்பிகையின் கர்ப்பக்கிரக விமானத்தில் ஐந்து தூபிகள் இருக்கின்றன. வேடன் மனைவியொருத்தி துர்நடத்தையால் கர்ப்பமுற்று இறைவன் சந்நிதியில் பொய் சொன்னதால் மேற்கே பார்த்திருந்த பெருமான் கிழக்கே திரும்பி விட்டார். அதனால் மேற்கு பார்த்த சந்நிதிக்கு 'கருவறுத்தான் சந்நிதி' என்று பெயர் கூறப்படுகிறது. இவ்வூரில் அருள்மிகு கல்யாண வரத ராசப் பெருமாள் கோயிலும் இருக்கிறது.

இக்கோயிலிலிருந்து அரசாங்கத்தார் 1911-ல் பதினேழு கல்வெட்டுக்களைப் படியெடுத்திருக்கின்றனர். சுவாமி, அம்பாள், கர்ப்பக்கிரகச் சுவர்கள், பிரகார மதிற்சுவர்: தட்சிணாமூர்த்தி, சந்நிதித்தூண், உட்கோபுர வாசல் இவைகளில் அக்கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. முதலாம் இராசராசன் இரண்டாம் ராஜராஜன், குலோத்துங்கன், ஜடாவர்மன் சுந்தரபாண்டியன், ஜடாவர்மன் வீர பாண்டியன், தஞ்சைஇரகுநாத நாயக்கர் ஆகிய மன்னர்களின் காலத்தவை. குலோத்துங்க சோழவள நாட்டு பனையூர் நாட்டுத் திருவாஞ்சியம் என்று குறிக்கின்றன. திருவாஞ்சிய தேவர், திருவாஞ்சியமுடைய மகாதேவர், திருவாஞ்சியமுடைய நாயனார் இவை இறைவனின் திருநாமங்களாகவும், திருப்பள்ளியறை நம் பிராட்டியார் என்பது தேவியின் திருப்பெயராகவும் அக்கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன. விளக்கு, நிலங்கள் தானம் செய்தது, கோயிலுக்கு நில விற்பனை செய்தது. விளக்கெரிக்கப் பொருள் வழங்கியது. கோயில் தேவரடியார்களுக்கு நிலம் விட்டது முதலியவற்றை அவை கூறுகின்றன. ஒரு கல்வெட்டில் அம்பிகைக்குக் கோயில்கட்டி குடமுழுக்கு நடத்தி, நிலம் வீடு தானம் செய்தது கூறப்பட்டிருக்கிறது. திருவாஞ்சியத்திற்கு 'இராஜ கம்பீரசதுர் வேதி மங்கலம்' என்ற பெயரும் உண்டென்பது குறிக்கப்பட்டிருக்கிறது. ஒரு கல்வெட்டில் திருவாஞ்சியம் கோயில் அதைச் சார்ந்த கோயில்கள் முதலியவற்றிற்குச் சொந்தமான நிலங்களின்பட்டியல்கொடுக்கப்பட்டிருக்கிறது. பெரும் பற்றப் புலியூர், சிறுபாண்டூர், கோமங்குடி திருவெள்ளறை முதலிய ஊர்களின்பெயர்களும் காணப்படுகின்றன. இவ்வூர் வயலிலுள்ள ஒரு கல்லில் காணப்படும் சாசனத்தில், சிதம்பரம் பிட்சா மடத்துத் தலைவர் அகோர சிவாசாரியரின் மாணவரான அச்சுற்றமங்கலம் (அச்சுதமங்கலம்) பெருமாநயினார் பண்டாரம் என்பவர் தனது மடத்துக்காகக் குண்டுவாஞ்சேரியில் ஒரு வேலி நிலம் சகம் 1501-ல் விலைக்கு வாங்கியது கூறப்பட்டிருக்கிறது.

வாழை யின்கனி தானும் மதுவிம்மு வருகையின்
சுளையும்
கூழை வானரந் தம்மிற் கூறிது சிறிதெனக்
குழறித்
தாழை வாழையந் தண்டாற் செருச்செய்து
தருக்கு வாஞ்சியத்துள்
ஏழை பாகனையல்லாமல் இறையெனக்
கருதுத லிலமே
— சுந்தரர்

'திருச்சிற்றம்பலம்'

# தென்கயிலாயங்கள்



ஆதிசேடனுக்கும் வாயுபகவானுக்கும் தங்களில் வலிமை மிகுந்தவர் யார் என்ற வாதம் நிகழ்ந்தது. கயிலை மலையை ஆதிசேடன் வளைத்துக் கட்டிப்பிடித்துக் கொள்ள வேண்டும் எனவும் அதை வாயு அசைத்துக் காட்டவேண்டும் எனவும் அவர்கள் ஒரு போட்டியைத் தங்களுக்குள் வைத்துக்கொண்டார்கள்.

வாயு தன் வலிமை எல்லாம் சேர்த்துக் காற்றை எழுப்பிக் கயிலை மலையை அசைத்தான். மலையின் மூன்று சிகரங்கள் வாயுவினால் பறித்து எறியப்பட அவை தெற்கே வந்து தனித்தனி மூன்று இடங்களில் விழுந்தன.

அம்மூன்று சிகரங்களில் ஒன்றுதான் ஆந்திர மாநிலத்திலுள்ள 'திருக்காளத்தி மலை, மற்றொன்று தமிழகத்திலுள்ள திரிசிராமலை. ஈழத்திலுள்ள மற்றொன்று திரிகோணமலை.

இம்மூன்று மலைகளும் தென் கயிலாயங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

# கடவுளை அழைக்கும் சித்தர் கருவூர்த் தேவர்

அருள் முருக செளந்தரராச அடிகளார், கல்பாக்கம்.

''தெளிவு தனில் தெளிவு தருமருளுங் காணும்
செகத்திலே சிவமயமுஞ் சேரத்தோணும்
வழியதனில் நல்லவழி ஞானங் கூடும்
மகத்தான வேதாந்தஞ் சித்தி காட்டும்''

ஆதிபராசக்தியை வாலைப் பெண்ணாக முன்வைத்து அவளது மாயை முதலான கூறுகளைப் பல வடிவங்களாக்கி அவளைச் சிறு பிள்ளைக் கன்னியாகவும் சித்தர் மன வடக்கத்தையும் சோதிக்கும் சிவகாமி ரூபியாகவும் விளையாட்டு வம்பியாகவும் சித்தரித்துக் காட்டிப் பூஜை செய்யும் முறைகளையும் கூறியவர் கருவூர்த்தேவர் என்ற சித்தர்.

''வாமியிவள் மர்மம் வைத்துப்பூசை பண்ண
மதியுனக்கு வேணுமடா அதிகமாக
காமிவெகு சாமி சிவ காமி ரூபி
காணரிது சிறுபிள்ளை கன்னி கன்னி
ஆமிவளை யறிந்தவர்கள் சித்தர் சித்தர்
அறிந்தாலு மன மடக்க மறியவேணும்
நாமிவளைப் பூசை பண்ண நினைத்த வாறு
நாட்டிலே சொல்ல வென்றால் நகைப்பார்
காணே''

கொங்கு நாட்டிலே கருவூரில் பிறந்தவர் கருவூர்த்தேவர். தஞ்சாவூரில் இராஜ இராஜ சோழன் கட்டிய கலைக்கோயிலிலுள்ள சிவலிங்கப் பிரதிஷ்டைக்கு இவரே அஷ்டபந்தனம் செய்வித்தார். இவரது காலம் 11-ம் நூற்றாண்டு ஆகும்.

இவர் போகரிசியின் மாணாக்கர். ஒன்பதாம் திருமுறையில் திருவிசைப்பா என்னும் பகுதியில் இவருடைய பாடல்களைக் காணலாம். அப்பகுதியில் இவர் கோயில் (சிதம்பரம்) திருக்களந்தை ஆதித்தேச்சுரம், திருக்கீழ்கோட்டூர் மணியம்பலம், திருமுகத்தலை, திரைலோக்கிய சுந்தரம், கங்கை கொண்டசோழேச்சரம், திரிபுவனம், திருநாட்டியக்குடி, தஞ்சை இராசராசேச்ரம், திருவிடைமருதூர் ஆகிய தலங்களுக்குச் சென்று அங்குள்ள சிவபெருமானை, அழகுதெய்வ்ம், அற்புததெய்வம், திருவருள் புரிபவரே, எந்தையும் தாயும் ஆயினையே, பிழைபொறுத்தாளும் பேரொளி என்று கூறி, செங்கணா போற்றி, திசைமுகன் போற்றி சிவபுரங்களுள் வீற்றிருந்த அங்கணா போற்றி, அமரனே போற்றி, அமரர்கள் தலைவனே போற்றி என்று போற்றி பாடியுள்ளார்.


''தன்னை யறிந்திடும் தத்துவ ஞானிகள்
முன்னை வினையின் முடிச்சை அவிழ்ப்பார்கள்
பின்னை வினையைப் பிடித்து பிசைவார்கள்
சென்னியில் வைத்த சிவனருளாலே''

இவரைப் பற்றிய கர்ண பரம்பரையான கதையொன்று அபிதான சிந்தாமணி என்ற நூலில் காணப்படுகிறது. அந்தக் கதையின் சாரம்:

கருவூர்த்தேவர் என்னும் பெயருள்ள இவர் கருவூரில் வேதியர் குலத்தில் பிறந்து ஞான நூல்களை ஆராய்ந்து சைவ சமயத்தை கடைபிடித்து சிவலோக சித்தியடைந்தார். சாதி குலம் நீத்து சிவத்தல யாத்திரை செய்து திருவிசைப்பா பதிகங்கள் பாடி வந்தார் என்பதாகும்.

சாதி சம்பிரதாயங்களைப் புறக்கணித்த இவரிடம் வெறுப்பு கொண்ட வேதியர் சிலர் இவரை மது மாமிசப் பட்சினி என்றும் பழி தூற்றி அருவெறுத்துப் பேசினார்கள். அவ்வேதியருக்கு அறிவூட்ட இவர் அக்காலத்தில் அடைமழை பெய்யச் செய்தும், ஆற்றில் வெள்ளம் பெருகச் செய்தும் தமக்கு பூதங்கள் குடை பிடித்து வரச் செய்தும் பல அற்புதங்களைக் காட்டினார்.

''ஆட்டிறைச்சி தின்றதில்லை அன்றும் இன்றும்
வேதியர்
ஆட்டிறைச்சி அல்லவோ யாகம் நீங்கள்
ஆற்றலே.
புலால் புலால் புலால் அஃதென்று பேதமைகள்
பேசுறீர்
புலாலை விட்டு எம்பிரான் பிரிந்திருந்தது
எங்ஙனே
புலாலுமாய் பிதற்றுமாய் பேருலாவும்
தானுமாய்
புலாலிலே முளைத்தெழுந்த பித்தன் காணும்
அத்தனே''



இவர் பல புண்ணிய தலங்களை வணங்கிச் சென்று கஜேந்திர மோட்சம் என்னும்தலத்தை அடைந்தார். அங்கிருந்த முன்றீசரைஅழைக்க அவர் தரிசனம் தந்து'என்ன வேண்டும்?' என்று கேட்டார். இவர் மது வேண்டும் என்று கேட்கவே, முன்றீசர் காளிக்குக்கட்டளையிட காளி மதுக்குடம் அளித்தாள்.

''கஞ்சா அபினியுடன் கள்ளுண்டு வாடாமல்
பஞ்சாமிர்தம் பருகுவது எக்காலம்''!

இவர் காளியிடம் மீனும் வேண்டும் என்று கேட்டார். காளி கோட்டவாசிகளைக் கேட்க, அவர்கள் எங்கு தேடியும் மீன் அகப்படாததைக் கண்டு இவர் அங்கிருந்த வன்னி மரத்தை நோக்கினார். உடனே அம்மரம் மீன் மாரி பொழிந்தது.

''மீன் இறைச்சி தின்றதில்லை அன்றும் இன்றும் வேதியர்
மீன் இருக்கும் நீரிலே மூழ்குவதும், குடிப்பதும்
மீனை மிக உண்டு நக்கி, விக்கி நின்ற கொக்கது போல
தேனை மிகஉண்டு தெவிட்டி நிற்பது எக்காலம்?''

இவ்வாறு கருவூர்த் தேவர்இறைவனையும் இறைவிகளையும் அழைத்துத் தனக்குவேண்டிய மது, மாமிசம்கூட கேட்டபோது அவர்கள் வந்து அளித்ததாக கதைகள் கூறுகின்றன. கடவுளையே அழைக்கும் சக்தி படைத்த சித்தராக இருந்தார் கருவூர்த்தேவர்.

பின்னர் கருவூர்த்தேவர் அவ்வூரை விட்டு புறப்பட்டு சென்று ஓர் விஷ்ணு ஆலயத்தை அடைந்து அங்குள்ள பெருமாளை கூவி அழைத்தார். பெருமாள் வராமலிருக்கவே 'அக் கோவிலில் பூஜை இல்லாமல் இருக்கக் கடவது' என்று சபித்துவிட்டு சென்று திருக்குற்றாலத்தை யடைந்து சிவ தரிசனம் செய்து திருவிசைப்பா பாடி பொதிகையில் எழுந்தருளியிருந்தார்.

''பாரேது புனலேது அனலுமேது
பாங்கான காலேது வெளியுமாகும்
நாரேது பூவேது வாசமேது
நல்ல புஷ்பந்தானேது பூசையேது
ஊரேது பேரேது சினமு மேது
ஓகோகோ அதியந்தானென்னசொல்வேன்
ஆறேது குளமேது கோயிலேது''

இவர் ஒருசமயம் நெல்வேலியப்பரின் சந்நிதானத்து முன்னின்று நிவேதன காலமென்றறியாமல் ''நெல்லையப்பா! நெல்லையப்பா! நெல்லையப்பா! என்று மும்முறை கூவியழைத்தும் மறுமொழி பெறாததால் கடவுள் அங்கில்லை'' என்று நீங்கி செல்ல அந்த ஆலயத்தில் எருக்கு முதலியன முளைத்தன. நெல்லையப்பர் ஓடிவந்து கருவூர்த்தேவரை மானூரில் சந்தித்து தரிசனம் தந்து அடிக்கொரு பொன்னும் கொடுத்து இவரை நெல்வேலிக்கு அழைத்து வந்து காட்சி தந்தார். அதனால் முன் முளைத்த எருக்கு முதலிய பூண்டுகள் ஒழிந்து பழைய பிரகாசம் உண்டாயிற்று

''செம்பொன்னே! பவளக்குன்றமே! நின்ற
திசைமுகன் மால் முதற் கூட்டத்
தம் பிரானனவர்கள் பருகும் ஆரமுதே!
சுத்தனே! பித்தனே னுடைய
சம்புவே! அணுவே! தாணுவே! சிவனே
சங்கரா! சாட்டியக் குடியார்க்
கின்பனே! எங்கும் ஒழிவற நிறைந்தேழ்
இருக்கையில் இருந்தவா றியம்பே''

இவரை அநாசாரமுள்ளவர் என்று பழித்துரைத்த மானூர் வேதியர்களுக்கு அவ்வூரில் வீடில்லாமல் போக வென்று சபித்தார்.

இவர் இவ்வூரில் இருக்கும் நாட்களில் தஞ்சை மன்னன் கட்டிய கோயிலில் சிவ பிரதிஷ்டையில் அஷ்டபந்தனம் பலமுறை இளகி பந்தன மாகாமல் போயிற்று. அதனால் சோழ மன்னன் வருந்தியபோது ஓர் அசரீரி தோன்றி ''கருவூர்த்தேவர் வரின் பந்தனமாகும்'' என்று கூறியது. அந்த சமயம் போகநாதர் என்னும் சித்தர் உரு மறைந்து அவ்விடம் வந்திருந்தார். அச்செய்தியை அவர் ஓர் ஓலையில் எழுதி காக்கை யொன்றின் கழுத்தில் கட்டியனுப்பி கருவூர்த்தேவரை வரவழைத்தார். தேவர் அக் கோயிலினுள் சென்று சிவலிங்கத்திற்கு அஷ்ட பந்தனம் செய்தார். அரசனும் மகிழ்ந்து அவருக்கு மரியாதை செய்வித்தான்.

''சரளமந் தார சண்பக வகுள
சந்தன நந்தன வனத்தின்
இருள் விரி மொய்ப்பின் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவரை
அருமருந் தருந்தி அல்லல்தீர் கருவூர்
அறைந்த சொன் மாலைஈ ரைந்தின்
பொருள் மருந் துடையோர் சிவ
பதமென்னும்
பொன்னெடுங் குன்றுடையோரே''.

பிறகு தேவர் அங்கிருந்து புறப்பட்டு திருவரங்கத்திற்கு சென்றார். அவ்வூரில் ஒருதாசி இவருடைய தேகப்பொலிவையும் தேஜசையும் கண்டு கவர்ச்சியுற்று. இவரை தன் வீட்டிற்கு அழைத்துச் சென்று பெரிதும் உபசரித்தாள். அன்ன ஆகாரத்துடன் அனைத்து இன்பமும் கொடுத்தாள்.

''புகலுவோர் வேதமெல்லாம் வந்ததென்று
பொய் பேசிச் சாத்திரங்கள் மிகவும்கற்றே
அகலுவார் பெண்ணாசை விட்டோ மென்றே
அறிவுகெட்டே ஊர்தோறும் சுற்றிச்சுற்றி
சகலமும் வந்தவர் போல வேடம் பூண்டு
சடை முடியும் காசாயந் தன்னைச் சாற்றி
இகலுமன மடங்காமல் நினைவு வேறாய்
எண்ணமெலாம் பெண்ணாசை பூசை
தானே''

அந்த தாசியிடம் இன்ப உபசரணைகள் எல்லாம் பெற்ற பின் மனம் ஆனந்தத்துடன் அரங்கநாதனை தரிசிக்க சென்றார். அங்கு அரங்கநாதன் தேவருக்குத் தான் அணிந்திருந்த இரத்தினப் பதக்கத்தை அன்பளிப்பாக அளித்தார். தேவர் அதனை நேராக எடுத்து வந்து தனக்கு இன்பமளித்து இனியஉபசரணைகளை செய்த தாசியிடம் தனது அன்பளிப்பாக அதைக் கொடுத்து நீ எப்போது என்னை நினைக்கிறாயோ அப்போது இங்கு இருப்பேன் என்று கூறி அங்கிருந்து புறப்பட்டு மீண்டும் தல யாத்திரை மேற்கொண்டார்.

அரங்கநாதன் திருக்கோவிலில் இறைவன் அணிந்திருந்த இரத்தினமாலை காணாதுஅனைவரும் துடிதுடித்துப் போயினர். என்ன செய்வதென்று அறியாது மிக வருத்தத்துடன் இருந்தனர். ஒருநாள் அந்தத் தாசியானவள் கருவூரார் அளித்துச் சென்ற இரத்தினப் பதக்கத்தை அணிந்து கொண்டு வெளியே வந்தாள். எதிர் பாராது அப்பக்கம் வந்த கோயில் பட்டர் அந்த தாசி அணிந்திருந்த இரத்தின பதக்கத்தைக் கண்டு விட்டார். அவளைத் திருடி என்று சந்தேகங் கொண்டு அவள் வீட்டிற்குக் காவலும் போட்டு விட்டார்.

பின்னர் முக்கிய பிரதிநிதிகளுடன் வந்து அந்த தாசியை விசாரிக்கவே, அவளோஇதனை எனக்கு ஓர் வேதியர் கொடுத்தார் என்று கூறினாள். யாரும் நம்புவதாக இல்லை. கருவூர்த் தேவர் அவளுக்கு கூறிச் சென்றபடி அந்த தாசி அவரை ஒரு முறை நினைத்து அழைக்கவும், அவர் நேரிலேயே வந்து விட்டார்.

கோயில் பிரதிநிதிகள் கருவூர்ததேவரை விசாரிக்க அவரோ இந்த பதக்கத்தைத் திருவரங்கத்து பெருமாளே எனக்களித்தார் என்று கூற யாரும் நம்புவதாக இல்லை. ஆனால் கருவூர்த்தேவரோ அந்த பெருமாளையே கூவி அழைத்தார். திருவரங்கத்து பெருமாள் ஆகாச வீதியில் பிரசன்னமாகி தானே அந்த பதக்கத்தைகருவூர்த்தேவருக்கு அன்பளிப்பாகக் கொடுத்ததாக சொல்லி காட்சியளித்து மறைந்தார். அனைவரும் இந்த நிகழ்ச்சியைக் கண்டு அதிசயித்து வாய் பொத்தி நின்றனர்.

''தோழியாம்செய்ததொழில்என்எம்பெருமான்
துணைமலர் சேவடி காண்பான்
ஊழிதோ றூழி உணர்ந்துளங் கசிந்து
நெக்குநைந் துளங்கரைந் துருக்கும்
கேழலும் புள்ளுமாகி நின்றிருவர்
கெழுவு கம்பலை சேய்கீழ்க்கோட்டூர்
வாழிய மணியம் பலவனைக்காண்பான்
மயங்கவும் மாரொழியோமே''

பிறகு இவர் கருவூரை யடைந்து அங்கிருக்கும்போது இவர் மீது துவேஷமுள்ள வேதியரெல்லாம் ஒருங்கு கூடி இவருக்குத் துன்பம் செய்யத் தொடங்கினார்கள். இவர் பயந்தவர் போல நடந்து திருஆனிலை கோவிலை அடைந்து அங்குள்ள சிவமூர்த்தியை அடைந்து சிவமூர்த்தியைத் தழுவிக் கொள்ளவே அந்த சிவமூர்த்தியானவர் இவரைத் தம்முள் ஒடுக்கிக் கொண்டார். கருவூர்த்தேவர் இறைவனுடன் ஒன்றாகக் கலந்துவிட்டார்.

''சிவனருளால் சிலர் தேவரு மாவர்
சிவனருளால் சிலர் தெய்வத்தோடொப்பர்
சிவனரு ளால் வினை சேரகி லாமை
சிவனருள் கூறில் அச்சிவ லோக மாமே''.

# நம் நாட்டுச் சித்தர்கள்

டாக்டர் இரா. மாணிக்கவாசகம்
*தமிழ்ப் பேராசிரியர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை.*

(முன் தொடர்ச்சி)

**13. கோரக்கர் :** இவர் மச்சேந்திரர் மாணாக்கர். காய கல்பம் செய்து கொண்டு, அல்லம தேவர்முன் தமது வல்லமையைக் காட்ட அல்லமர் அவர் கரத்து வாள் ஒன்று கொடுத்துத் தமது தேகத்தை வெட்டும்படி கூறினர். தேவர் வெட்டிய போது தேகம் ஊறு படாது வாள் மழுங்கியது. பின் அல்லமர் அந்த வாளைக் கோரக்கரிடம் கொடுத்துத் தம்மை வெட்டக் கூறினர். அவ்வாறு சித்தர் செய்ய வாள் தேகத்திற்குள் புகுந்து வெளிப்படவும் தேகம் சலனம் இல்லாமல் இருந்தது. இதனைக் கண்டு சித்தர் தேவருக்கு அடிமைப் பட்டனர்.

இவர் கஞ்சாவை முதல் சரக்காகக் கொண்டமையின் அதற்குக் கோரக்கர் மூலி எனப் பெயர். இவர் செய்த மருத்துவ நூல் கோரக்கர் வைப்பு என்பது. மச்சேந்திரநாதர் என்னும் சித்தரோடு தொடர்பு கொண்டவர் என்ற சேதியும் காணப்படுகின்றது. மச்சேந்திர நாதர் சஞ்சாரியாகத் திரிந்து வருகையில் ஒருத்தி பிட்சையிட்டு அவரைப் புத்திரப் பேறு வேண்டினள். சித்தர் இவள்மீது கருணை செய்து விபூதி பிரசாதித்து அதனை உட்கொள்ளச் சொன்னார். விபூதி கொண்டவள் அண்டை வீட்டுக்காரியிடம் நடந்தவைகளைக் கூற அவள் இத்தவசி மாய வேஷக்காரன். ஒருக்கால் உன்னை மயக்கித் தன் வழிக்கொள்ள இவ்வாறு செய்தல் கூடும் எனப் பயமுறுத்தி அதனை அடுப்பிலிடச் செய்தாள். அவ்வகை அடுப்பிலிட்டு மறந்து போய் இவளிருக்கையில் சிலகாலம் பொறுத்து மீண்டும் அவ்வழி சித்தர் வந்து விபூதி பெற்றவள் வீடு சென்று 'நான் உன் பிள்ளையைப் பார்க்க வேண்டும் அழைக்க' என்றனர். விபூதி பெற்றவள் அண்டை வீட்டுக்காரி சொல்லால் தன் செயலனைத்தும் ஒளியாது கூறினாள். சித்தர் 'ஆயின் அவ்வடுப்புச் சாம்பல் எங்குளதென, அதனை வாரி வழக்கமாகத் கொட்டும் வீட்டின் புறக்கடையிலுள்ள குப்பையைக் காட்டினாள். சித்தர் அவ்விடம் சென்று 'கோரக்கா வா' என்று அழைக்க, ஏன் என்னும் ஓர் ஓசை உண்டாயிற்று. பலரும் கண்டு வியக்க, சித்தர் குப்பையை அகற்றக்கூற அதில் சித்தர் தாம் திருநீறு கொடுத்த காலம் முன் பிள்ளையைக் கண்ட காலம் வரையிலுள்ள ஆண்டுகள் நிரம்பப் பெற்ற சிறுவனை அப்பெண்ணுக்குக் கொடுத்தனர். இக்குறிப்புகள் அபிதான சிந்தாமணி என்ற நூலில் காணப்படுகிறது.

வட இந்தியாவில் வாழ்ந்தவர்களாகக் குறிக்கப்படும் நவநாத சித்தருள் ஒருவரான கோரக்கநாதரே தமிழ்நாட்டில் வாழ்ந்து கோரக்கர் மூலிகை அல்லது கோரக்கர் வைப்பு என்ற நூறு பாடல்கள் அடங்கிய நூல் எழுதினார் எனவும் எண்ண வேண்டியுள்ளது. யாக்கோபு-இராமதேவர் ஆனது போலவும், சுந்தரநாதர்-திருமூலர் ஆனது போலவும், கோரக்கநாதர் கோரக்கராக ஆகியிருத்தல் கூடும்.

இவர் அல்லமதேவர் காலமாகையால் கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர் என்பர்.

**14. சட்டைமுனி:**—இவர் பிறப்பால் சேணியர் என்பர். போகருடைய மாணவராகிய இவர் உரோமரிசியுடன் மாறுபட்டவராய் இருந்தார் என்பர்.

மதுரை வாலைசாமி என்பவர் இவரைத் தம் குரு எனக் குறிக்கின்றார்:

'எங்கள் குரு சட்டைமுனியாரிருநூறும் பாரடி ஞானப்பெண்ணே' என்பது அவர் பாடல். இவரைப் பற்றிய வேறு கருத்துக்கள் கிடைக்கவில்லை. சித்தர் ஞானக்கோவையில் கைலாயக் கம்பளிச் சட்டை முனி நாயனார் செய்த முன் ஞானம் நூறு, பின் ஞானம் நூறு எனச் சுமார் 200 பாடல்கள் காணப்படுகின்றன.

சித்தர்களைக் கையிலாயப் பரம்பரை எனக் குறிப்பது எல்லாச் சித்தர்களது மரபாகும். இதற்கான விளக்கத்தைத் திருமூலர் பற்றிய பகுதியில் காணலாம்.



‘கைலாயப் பரம்பரத்தி லென்னை யாண்ட
கடவுளெனுந் தெட்சணா மூர்த்தி பாதம்
கைலாயத் தெனையீன்ற ஆயிபாதம்
கருணையுடன் போற்றிநித்தம் ஞானம்
சொல்வேன்
கைலாய நிர்க்குணநிர் மலமே தேவர்
காட்டுகின்றீர் கேசரிசின் மயமாய்க் கையில்
கைலாய பரம்பரையாய் வந்த பேர்க்குக்
கடைப்பிள்ளை ஞானத்தைப் பாடுவேனே’

என்பது இவரது பாடலாகும். இப்பாடலால் நம் கருத்து தெளிவாகும். எனவே, கயிலாய பரம்பரையைச் சார்ந்தவர். கம்பளிச் சட்டை யணிந்தவர் என்பது புலனாகிறது. தற்போது திருவலம் என்னும் இடத்தில் இருக்கின்ற ஞானி கோணிப்பையையே பயன்படுத்தி வருவதைப் பார்க்கிறோம். இது போல அவர் கம்பளியைப் பயன்படுத்தியிருக்கலாம்.

இவரது முன் ஞானம் நூறு என்ற பகுதியில் உலகியல் கருத்துக்களும், சமய ஒற்றுமை பற்றிய கருத்துக்களும் கூறப்படுகின்றன.

‘சமயமெல்லாம் சத்தியுண்டு சிவமு முண்டு
சண்டாளர் பிரித்தல்லோ தள்ளி னார்கள்
சமயமெல்லாம் வேதாந்தசித் தாந்த முண்டு
சாதகத்தைப் பாராமற் றயங்கி னார்கள்
சமயமெல்லாம் நாதமுண்டு விந்து முண்டு
காக்காமற் கெட்டார்க ளுலகத் தோர்கள்
சமயமெல்லாம் அம்பரமாம் ஞானமுண்டு
தாயைவிட்ட பாவத்தால் தவறிப் போச்சே’

‘தள்ளுகின்ற வுருப்புவந்தால் கருவைக் கேளு
சாதகமாய்க் குண்டலிக்குள் வாசிவைத்துத்
தெள்ளுகிற பிரணாயம் பண்ணித் தீருந்
திரண்டொலியுஞ் சிலம்பொலியுங் காணும்
காணும்
நள்ளுகிற கண்டத்தே யங்கென்றூனும்
நலம்பெரிய புருவமையந் திறந்து போகும்
அள்ளுகிற கனிபோலே யமிர்தம் வீழும்
அப்போது காயசித்தி யறிந்து கொள்ளே’

இவை சில எடுத்துக்காட்டுகள். இரண்டாம் பகுதியாகிய பின் ஞானம் நூறு என்பதில் ஏறக்குறைய முழுமையும், யோகம் பற்றிய கருத்துக்களையும், சித்தர் பற்றிய கருத்துக்களையும் காணலாம்.

**(தொடரும்)**

# அருள்மிகு கபாலீசுவரர்
# ஆலய வழிபாடுகளும் திருவிழாக்களும்

டாக்டர் சு. இராஜசேகரன்
*தமிழ்ப் பேராசிரியர், மாநிலக் கல்லூரி, சென்னை-5.*

திருவிழாக்கள் மக்களுக்கு மகிழ்ச்சியைத் தருவனவாகும். தமிழ்நாட்டில் விழாக்கள் வீடுகளிலும் கோயில்களிலும் சிறப்பாகநடை பெறுகின்றன. கோயில்களில் நடைபெறும் விழாக்களைத் திருவிழாக்கள் என்பர். நாள் தோறும் இறைவனுக்குச் செய்யப் பெறும் வழி பாடுகளோடு சிறப்பாகச் செய்யக்கூடிய வழி பாடுகளைத் திருவிழா என்பர். திங்கள் விழா, ஆண்டு விழா, பல ஆண்டுகளுக்கு ஒரு முறை நடக்கும்விழா என்று திருக்கோயில் விழாக்கள் மூவகைப்படும்.

**விழா**

விழாஎன்னும் சொல்லுக்கு மகிழ்ச்சியைத் தருவது என்பதே பொருளாகும். விழா என்னும் சொல்லுக்கு அடிச்சொல் விழை என்பதாகும். இதற்கு விரும்பு, அன்பு செலுத்து என்பவையே பொருள்களாகும். விழாவைக் கொண்டாட்டம் என்றும் கூறுகின்றனர். திருவிழாக்களில் சடங்குகள் மட்டுமே உள்ளன என்று எண்ணக் கூடாது. தத்துவ விளக்கங்களும் அடங்கியுள்ளன.

**திருவிழாவில் இறைவன் திருவீதி உலா**

கோயில் திருவிழாக்களில் இறைவன் கோயிலைச் சுற்றியுள்ள மாடவீதிகளில் உலா வருதல் குறிப்பிடத்தகுந்த சடங்காகும். உலா வரும் நிகழ்ச்சி, சமுதாயத்தில் உள்ளோர் அனைவருக்கும் இறைவன் பொதுவானவன் என்பதை உணர்த்துகிறது. தொலை தூரங்களிலிருந்து வருவோரும் கோயிலுக்கு வர முடியாத நிலையில் உள்ளவர்களும், ஒரு காலத்தில் கோயிலுக்குள்ளே நுழைவதற்கு அனுமதி மறுக்கப்பட்டவர்களும் இறைக் காட்சியைக் காண்பதற்காக ஏற்பட்ட சடங்கே திருவீதி உலாவாகும். இத்திருவிழாக்களினால் சமுதாயத்திலுள்ள எல்லாப் பிரிவினரும், குறிப்பாகக் கலை வல்லுநர்கள், தொழிலாளர்கள், ஏழைகள் பயன்பெறுகின்றனர். தேர்த் திருவிழா சமுதாய ஒற்றுமையை உணர்த்தும் வகையில் உள்ளது. வாணிகம் வளர்ச்சியடைகிறது. கோயில் உள்ள ஊர் பொருளியல் நிலையில் உயர்நிலை அடைகிறது.

**கபாலீசுவரர் கோயில் வழிபாடுகளும் திருவிழாக்களும்**


கி.பி. ஏழாம் நூற்றாண்டில் திருமயிலையில் திங்கள்தோறும் கபாலீசுவரர் கோயிலில் நடந்து வந்த திருவிழாக்களைப் பூம்பாவைப் பதிகத்தின் பத்துப் பாடல்களில் திருஞான சம்பந்தர் குறிப்பிட்டுள்ளார். அக்காலத்திலேயே விழாக்கள் நிறைந்த நகரமாகத் திருமயிலை விளங்கியிருக்கிறது.

இறைவனை நம்முடைய நலன் கருதி வழிபடுகிறோம். கோயில்களில் நாள் வழிபாடுகளை அருச்சகர்கள் செய்கின்றனர். அப்பொழுது மக்கள் பார்வையாளராக மட்டுமே இருக்க முடிகின்றது. ஆனால், திருவிழாக்கள் நடைபெறும்போது மக்கள் அனைவரும் இறைவனுடைய திருத்தொண்டில் நேரடியாகக் கலந்து கொள்ள முடிகின்றது.

முதலில் திருஞான சம்பந்தர் கூறும் கபாலீசுவரர் கோயில் திருவிழாக்கள்; அதைத் தொடர்ந்து நாள் வழிபாடு, வார விழா, நாயன்மார்களின் திருநட்சத்திரத் திருவிழா, நாயன்மார்களின் அற்புதச் செயல்களைப் போற்றும் திருவிழாக்கள், திங்கள் திருவிழாக்கள், பிரதோஷம், தைப்பூசம், மாசி மகம், நவராத்திரி கொலு, பிரம்மோற்சவக் கும்பாபிஷேகம் முதலாய செய்திகள் குறித்தும் கூறப் பெறும்.

**திருஞான சம்பந்தர் கூறும் விழாக்களும் விரதங்களும்**

பெருஞ்சோற்று விழா, ஐப்பசித் திங்களில் ஓண நட்சத்திரத்தில் நடைபெறும் விழா, கார்த்திகைத் திங்கள் கார்த்திகை நட்சத்திரத்தில் தொன்று தொட்டுக் கொண்டாடும் விளக்கீட்டு விழா, மார்கழித் திங்கள் ஆதிரை நாளில் நடைபெறும் திருவிழா, தைத்திங்கள் பூச



நாளில் கொண்டாடும் திருவிழா, மாசித் திங்கள் மக நாளில் நடத்தும் கடலாட்டு விழா, பங்குனி உத்திரத் திருவிழா, அட்டமி நாள் விழா, பொற்றாப்பு விழா, பெருஞ்சாந்தி ஆகிய விழாக்கள் கபாலீசுவரர் கோயிலில் கொண்டாடப்பட்ட செய்தியினைத் திருஞான சம்பந்தர் பூம்பாவைப் பதிகத்தில் பத்துப் பாடல்களில் கூறுகின்றனர். இவற்றுள் முதற் பாடலில் சிவபக்தர்களுக்கு உணவிடும் விழா வைக் கூறுகிறார். இதற்கு அடுத்த பாடலில் ஐப்பசித் திங்களில் நடைபெறும் ஓணவிழா கூறப்பெறுவதால் இது புரட்டாசித் திங்களில் நடைபெற்றிருக்கக் கூடும்.

ஐப்பசி ஓணவிழாவிலும், சிவபக்தர்கள் உண்டு களித்தல் கூறப் பெறுகின்றது. 'ஐப்பசி ஓணவிழா ஸ்ரீராமனால் கொண்டாடப்பட்ட செய்தியினை வடமொழிப் புராணம்கூறுகிறது. ஐப்பசி ஓணத்தில் கொடியேற்றிக் கிருத்திகையில் தீர்த்தம் என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. தமிழ்ப் புராணத்தில் ஐப்பசி ஓணத்தைப் பத்தாவது நாள் தீர்த்தமாகக் கொண்டு விழா ஸ்ரீராமரால் நடத்தப்பட்ட செய்தி கூறப்படுகிறது' என்று ம. பாலசுப்பிரமணிய முதலியார் குறிப்பிட்டுள்ளார். கார்த்திகை விளக்கீடு, ஆதிரை நாள், தைப்பூசம், மாசிக் கடலாட்டு, பங்குனி உத்திரம் ஆகிய ஐந்தும் இன்றும் தமிழ் நாடெங்கிலும் கொண்டாடப்படுகின்றன. மயிலையில் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. அட்டமிநாள் என்பது சிவ விரதங்கள் எட்டனுள் ஒன்று; 'பதினெண் கணங்கள் தம் அட்டமி நாள்' என்று சம்பந்தர் குறிப்பதாகக் கொள்வதே சிறந்ததாகும்.

பொற்றாப்பு என்பது மார்கழித் திங்களில் சிவன் கோயில்களில் மூன்று, ஏழுஅல்லது பத்துநாட்கள் நடக்கும் ஊஞ்சல் உற்சவத்தைக் குறிக்கும் என்பர்.

பெருஞ்சாந்தி என்பது ஆவணி அவிட்டம் ஈறாக மூன்று, ஐந்து, அல்லது ஏழு நாட்களில் சிவயாகம் முதலிய சிறப்புடன் நடக்கும் 'பவித்ரோத்ஸவமாகிய ஸம்வத்ரை பிராயச் சித்தம்' என்பர். குட முழுக்கு என்றும் சிலர் இதைக் கருதுவதுண்டு. இவையே திருஞான சம்பந்தர் கூறும் திருவிழாக்களாகும்.

**நாள் விழா:**

நாள்தோறும் கபாலீசுவரர் கோயிலில் காலை ஐந்து மணிக்குத் திருவனந்தல் பூசையும், பிறகு காலை சந்தி பூசையும், உச்சி கால பூசையும், சாயங்கால பூசையும், அர்த்தசாம பூசையும் ஆக ஐந்துகால பூசைகள் நடைபெறுகின்றன. இவற்றுள் சாயங்கால பூசை குறிப்பிடத் தகுந்ததாகும். அபிடேக ஆரம்பம் பிறகு நைவேத்தியம் நடக்கும். தீபாராதனை சுவாமியிடமிருந்து மாலை 5-30-க்குத் தொடங்கும். வேதபாராயணம், தேவாரப் பதிகம் பாடுதல் நாதசுரத்தோடு ஒவ்வொரு சுவாமி சந்நிதியிலும் தீபாரர்தனைகள் நடைபெறும். அர்த்தசாம பூசை பள்ளியறை உற்சவமாகும்.

**வார விழா:**

வியாழக்கிழமை தோறும்தட்சிணாமூர்த்தி கடவுளுக்கு சிறப்பாக அபிடேக ஆராதனைகள் நடைபெறும். வெள்ளிக் கிழமைதோறும் கற்பகவல்லியின் கோயில் பிரகார உற்சவம் நடைபெறும். உள்பிரகாரத்தில் அம்மனை அலங்கரித்து விமானத்தில் வைத்து வேத

பாராயணம் தேவார ஓதுவார் மற்றும் மேளங்களுடன் மூன்று முறை சுற்றுவார்கள். ஒவ்வொரு திங்களின் இறுதி வெள்ளிக்கிழமையிலும் கற்பகவல்லியின் கோயில் பிரகார உற்சவத்துடன் ஊஞ்சல் உற்சவமும் சிறப்பாக நடைபெறும்.

**திங்கள் விழாக்கள்:**

தமிழ்த் திங்கள்தோறும் முதல் நாளில் கோயில் முழுவதும் உள்ள தெய்வத் திருவுருவங்களுக்கு எண்ணெய்க் காப்பு சாத்தப்படுகிறது. இலிங்கச்சுத்தியும், அம்மனுக்கு அபிடேகமும் நடைபெறுகின்றன. திங்கள்தோறும் திரயோதசி திதியில் சுக்கில பட்சம் கிருட்டிண பட்சத்தில் பிரதோஷ உற்சவம் நடைபெறும். மூலவருக்குப் பௌர்ணமிதோறும் பூசை நடப்பதுண்டு. ஒவ்வொரு பௌர்ணமியிலும் சந்திரசேகர சுவாமி திருவீதி உற்சவம் நடைபெறும். சித்திரா பௌர்ணமி கார்த்திகைப் பௌர்ணமி தீபம், மார்கழிப் பௌர்ணமி அரைக்கட்டு, பங்குனி உத்திரம் திருக்கல்யாணம் ஆகிய நான்கு பௌர்ணமி நாட்களில் சோமாஸ்கந்தர் பஞ்ச மூர்த்திகளுடன் வீதி உற்சவம் நடைபெறும். அமாவாசைகளில் மூலவர் சோமாஸ்கந்தருக்கு அபிடேகம் நடைபெறும். பன்னிரண்டு கிருத்திகைகளிலும் சிங்காரவேலர் திருவீதி உற்சவமும், ஆடிக் கிருத்திகையில் மயில்வாகனத் திருவீதி உற்சவமும் நடைபெறும். ஒவ்வொரு திங்களிலும் இந்நாளில் சிங்காரவேலர், மூலவர், உற்சவர், சண்முகர் ஆகியோருக்கு அபிடேக ஆராதனைகள் நடைபெறும். வைகாசி விசாகத்தில் சண்முகர் திருவீதி உற்சவம் நடைபெறும். திங்கள்தோறும் இரேவதி நாளில் வாயிலார் நாயனாருக்குக் கோயில் பிரகார உற்சவம் நடைபெறும். மார்கழி இரேவதியில் வாயிலாரின் ஆண்டு நட்சத்திர நாளில் பூப்பல்லக்கில் திருவீதி உற்சவம் நடைபெறும். கபாலீசுவரருடைய திருநட்சத்திரம் திருவாதிரையாகும். திங்கள்தோறும் திருவாதிரையில் சோமாஸ்கந்தருக்கு அபிடேகம் நடைபெறும். மாசித் திங்கள் திருவாதிரையில் அபிடேகம் சிறப்பாக நடத்துவர். நூற்றெட்டுக் கலசங்களுடன் மண்டபத்தில் அபிடேகமும் கோயில் பிரகார உற்சவமும் நடைபெறும். சூரிய சந்திர கிரகண புண்ணிய காலங்களில் தீர்த்தவாரி அபிடேக ஆராதனைகள் நடைபெறும்.

**நாயன்மார்களின் திருநட்சத்திரத் திருவிழா:**

திருத்தொண்டத்தொகையில் அறுபத்து மூன்று சைவ நாயன்மார்களைச் சுந்தரர் குறிப்பிட்டுப் பாடியுள்ளார். இவர்களுடைய வரலாற்றைச் சேக்கிழார் திருத்தொண்டர் புராணம் என்னும் பெயரில் விரிவாக எழுதினார். கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் இப்புராணம் எழுதப்பட்ட பிறகு, சோழர் காலத்தில் சிவன் கோயில்களில் அறுபத்து மூன்று நாயன்மார்களுக்கும் கருங்கல்லிலும் பஞ்சலோகத்திலும் சிலைகள் வடிக்கப்பட்டு நாள்தோறும் பூசை செய்யும் மரபு ஏற்பட்டது. இந்த நாயன்மார்கள் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் சுந்தரர் காலம் வரையில் தோன்றியவர்களாவர். அரிசனங்களிலிருந்து அந்தணர் வரை சமுதாயத்தின் எல்லாப் பிரிவைச் சேர்ந்தவர்களும் நாயன்மார்களில் அடங்கியுள்ளார்கள். இந்த நாயன்மார்களின் திருவுருவச் சிலைகள் சிவன் கோயில்களில், சிவலிங்கம் பிரதிட்டை செய்யப்பட்டிருக்கும் இடத்தைச் சுற்றியுள்ள பிரகாரத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. நாயன்மார்களுக்குரிய திருநட்சத்திர நாட்களைக் குறித்து வழிபடும் வழக்கம் இருந்து வருகிறது.

இவ்வழக்கம் கபாலீசுவரர் கோயிலிலும் பின்பற்றப்படுகிறது. பிரம்மோற்சவத்தின் எட்டாம் நாள் அறுபத்து மூவர் விழாவாகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. கபாலீசுவரர் கோயிலில் அறுபத்து மூன்று நாயன்மார்களின் திருநட்சத்திர நாட்களில் அபிடேக ஆராதனைகள் அந்த நாயன்மார்களுக்குச் சிறப்பாக நடத்தப் பெறுகின்றன. அதிபத்தருக்கு ஆவணி ஆயிலியமும், அப்பூதியடிகளுக்குத் தைச் சதயமும், அமர்நீதியாருக்கு ஆனிப் பூரமும், அரிவாட்டாயருக்குத் தைத்திருவாதிரையும், ஆனாயருக்குக் கார்த்திகை அத்தமும், இசைஞானியாருக்குச் சித்திரைச் சித்திரையும், இடங்கழியாருக்கு ஐப்பசிக் கார்த்திகையும், இயற்பகையாருக்கு மார்கழி உத்திரமும், இளையான்குடி மாறனாருக்கு ஆவணி மகமும், உருத்திரபசுபதியாருக்குப் புரட்டாசி அசுவதியும், எறிபத்தருக்கு மாசி அத்தமும், ஏயர்கோன் கலிக்காமருக்கு ஆனி இரேவதியும் ஏனாதிநாதருக்குப் புரட்டாசி உத்தராடமும் ஐயடிகள் காடவர்கோனுக்கு ஐப்பசி மூலமும் கணநாதருக்குப் பங்குனித் திருவாதிரையும், கணம்புல்லருக்குக் கார்த்திகைக் கார்த்திகையும், கண்ணப்பருக்குத் தை மிருகசீரிடமும், கலிக் கம்பருக்குத் தை இரேவதியும், கலியருக்கு ஆடிக் கேட்டையும், சுழறிற்றறிவாருக்கு ஆடி சுவாதியும், சுழற்சிங்கருக்கு வைகாசிப் பரணியும், காரியாருக்கு மாசிப் பூராடமும், காரைக்காலம்மையாருக்குப் பங்குனிச் சுவாதியும், குங்குலியக் கலயருக்கு ஆவணி மூலமும், குலச்சிறையாருக்கு ஆவணி அனுடமும், கூற்றுவருக்கு ஆடித் திருவாதிரையும், கோச்செங்கட் சோழருக்கு மாசிச் சதயமும், கோட்புலியாருக்கு ஆடிக் கேட்டையும், சடையனாருக்கு மார்கழித்திருவாதிரையும், சண்டேசுவரருக்குத் தை உத்திரமும், சத்தியாருக்கு ஐப்பசிப் பூசமும், சாக்கியருக்கு மார்கழிப் பூராடமும், சிறப்புலியாருக்குக் கார்த்திகைப் பூராடமும் சிறுத்தொண்டருக்குச் சித்திரைப் பரணியும் சுந்தரருக்கு ஆடிச் சுவாதியும், செருத்துணையாருக்கு ஆவணிப் பூசமும், சோமாசி மாறருக்கு வைகாசி ஆயிலியமும், தண்டியடிகளுக்குப் பங்குனிச் சதயமும், திருக்குறிப்புத்தொண்டருக்குச் சித்திரைச் சுவாதியும், திருஞானசம்பந்தருக்கு வைகாசி மூலமும், திருநாவுக்கரசருக்குச் சித்திரைச் சதயமும், திருநாளைப் போவாருக்குப் புரட்டாசி உரோகிணியும், திருநீலகண்டருக்குத் தை விசாகமும், திருநீலகண்டயாழ்ப்பாணருக்கு வைகாசி மூலமும், திருநீலநக்கருக்கு வைகாசி மூலமும், திருமூலருக்கு ஐப்பசி அசுவதியும், நமிநந்தியடிகளுக்கு வைகாசிப் பூசமும், நரசிங்க முனையரையருக்கு

புரட்டாசிச் சதயமும், நின்ற சீர் நெடுமாற னுக்கு ஐப்பசிப் பரணியும், நேசருக்குப்பங்குனி உரோகிணியும், புகழ்ச் சோழருக்கு ஆடிக் கார்த்திகையும், புகழ்த்துணையாருக்கு ஆவணி ஆயிலியமும், பூசலாருக்கு ஐப்பசி அனுடமும், பெருமிழலைக் குறும்பருக்கு ஆடிச் சித்திரையும், மங்கையர்க்கரசியாருக்குச் சித்திரை உரோகிணியும், மானக்கஞ்சாறருக்கு மார்கழிச் சுவாதியும், முருகருக்கு வைகாசி மூலமும், முனையடுவாருக்குப் பங்குனிப் பூசமும், மூர்க்கருக்குக் கார்த்திகை மூலமும், மூர்த்தியாருக்குக் கார்த்திகை உத்திரமும், வாயிலாருக்கு மார்கழி இரேவதியும், விறல் மிண்டருக்குச் சித்திரைத் திருவாதிரையும் திரு நட்சத்திரங்களாகும். மேற் குறிப்பிட்ட நாள் களில் நாயன்மார்களுக்கு அபிடேக ஆராத தனைகள் நடைபெறுகின்றன.

**நாயன்மார்களின் அற்புதச் செயல்களைப் போற்றும் திருவிழாக்கள்:**

**திருநாவுக்கரசருக்குக் கட்டமுது உற்சவம்:**

சித்திரைத் திங்கள் சதய நட்சத்திரத்தில் அப்பருக்குக் காலையில் கட்டமுது உற்சவம் நடைபெறுகிறது. மாலையில் பூப்பல்லக்கில் திருவீதி உற்சவம் நடைபெறுகிறது. இரவில் ஜோதியில் கலத்தல் என்னும் ஐதிகம் நடை பெறுகிறது.

திருநாவுக்கரசர் திருவானைக்காவல் விட்டுத் திருப்பைஞ்ஞீலியை நோக்கி வர, பசி யினாலும் தாகத்தினாலும் வருந்தி இளைத் தார். சிவபெருமான் அதைக் கண்டு வழியில் சோலையும் குளமும் உண்டாக்கி ஒரு பிராமண வடிவம் கொண்டு பாதையில் கட்டமுது வைத் துக் கொண்டிருந்தார். அப்பர் அங்கு நெருங்க அக் கட்டமுதை அவருக்குக் கொடுத்தார். அவ் வமுது உண்டு இளைப்பாறித் திருப்பைஞ்ஞீலிக் குப் புறப்பட அப்பிராமணரும் கூடச் சென் றார். அக்கோயில் செல்லுமுன் சிவபெருமான் மறைந்தார். அப்பர் இது ஓர் அற்புதம் என்று எண்ணிக் கோயிலுக்குள் சென்று பதிகம் பாடி னார். இச்செயலை நினைவு கூரும் வகையில் இத்திருவிழா நடத்தப் பெறுகின்றது.

**திருஞானசம்பந்தர் திருவிழா:**

ஆண்டுதோறும் வைகாசித் திங்களில்பத்து நாட்களுக்குத் திருஞான சம்பந்தருக்குத் திரு விழா நடைபெறுகிறது. அந்நாட்களில் திரு ஞான சம்பந்தரின் பிறப்பு, வளர்ப்பு, அற்புதச் செயல்கள் ஜோதியில் கலத்தல் ஆகிய ஐதீ கங்கள் நடைபெறுகின்றன. முதல் ஒன்பது நாட்களுக்கு இரவில் திருஞான சம்பந்தரின் கோயில் பிரகார உற்சவமும் பத்தாம் நாள் காலையில் பல்லக்கில் மணக்கோலத்தில் வீதி வலம் வருதல், இரவில் பூப்பல்லக்கில் வீதி வலம் வரும் நிகழ்ச்சியும் நடைபெறுகின்றன.

முதல் நாளில் தாலாட்டு உற்சவமும் இரண்டாம் நாளில் வளர்ப்பருவ ஐதீகமும், மூன் றாம் நாளில் ஞானப்பால் உண்ணுதல் பொற் றாளம் பெறுதல் ஆகிய ஐதீகங்களும், நான் காம் நாளில் முத்துச் சிவிகை பெறுதல்; முயல கன் என்னும் நோய் தீர்த்தல் ஆகிய ஐதீகங் களும், ஐந்தாம் நாளில் அடியார் சுரப்பிணி தீர்த்தல், முத்துப்பந்தல் பெறுதல் ஆகிய ஐதீகங்களும், ஆறாம் நாளில் அரவந்தீண்டப் பெற்ற மகனை உயிர்ப்பித்தல், திருவீழிமிழலை யில் படிக்காசு பெறுதல் ஆகிய ஐதீகங்களும், ஏழாம் நாளில் பாண்டியன் சுரம் தீர்த்தல் வைகையில் ஏடெதிர் செல்லல் அனல்வாதம் ஆகிய ஐதீகங்களும், எட்டாம் நாளில்ஓடம் விடுதல், ஆண் பனையைப் பெண்பனை ஆக்கு தல் ஆகியஐதீகங்களும், ஒன்பதாம் நாளில் திருமயிலையில் அங்கம் பூம்பாவையாக்கிய ஐதீகமும், பத்தாம் நாளில் திருமணக் கோலம் திருமணம், திருக்கல்யாண ஜோதியில் கலத்தல் ஆகியஐதீகங்களும்நடைபெறுகின்றனதிருஞான சம்பந்தரின் வாழ்க்கை வரலாற்றையும் அவர் செய்த அற்புதச் செயல்களையும் ஒருங்கே நினைவுகூரும் வகையில் இவ்விழா நடைபெறு கிறது. திருஞான சம்பந்தர் மயிலைத் தலத் தின் மீது பதிகம் பாடியதாலும், அங்கம் பூம்பாவையாக்கிய அற்புதச் செயலைச் செய்த தாலும் அவரைப் போற்றும் வகையில் பத்து நாட்கள் இவ்விழா எடுப்பது பாராட்டிற் குரியதாகும்.

**சுந்தரர் திருநட்சத்திர உற்சவம்:**

ஆண்டுதோறும் ஆடித் திங்களில் சுவாதி நட்சத்திரத்தில் சுந்தரருக்கு உற்சவம் நடை பெறுகின்றது. மாலையில் பூப்பல்லக்கில் சேர மான் பெருமாள் நாயனாருடனும் சுழறிற்றறி வாருடனும் திருவீதி உற்சவம் நடைபெறும். சுந்தரர் யானை வாகனத்தின் மீதும் சேர மான் பெருமாள் நாயனார் குதிரை வாகனத் தின் மீதும் உலா வருவர்.

**ஆண்டு முழுவதும் நிகழும் விழாக்கள்:**

விழாக்கள் மலிந்த திருக்கோயில் கபாலீசு வரமாகும். இங்குத் திங்கள்தோறும் நடை பெறும் திருவிழாக்கள் இப்பகுதியில் கூறப் பெறுகின்றன.

**சித்திரை:**

சித்திரைத் திங்கள் முதல்நாள் ஆண்டுப் பிறப்புச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. கோயில் முழுவதும் எல்லாமூர்த்திகளுக்கும் அபிடேகம் நடைபெறும். மூலவர் கபாலீசு வரருக்கு சிறப்பு அபிடேகம் நடைபெறும். அன்று மாலையில் சோமாஸ்கந்தர் மண்டபத் தில் பஞ்சாங்கம் படிக்கும் நிகழ்ச்சி நடை பெறும். கபாலீசுவரர் வசந்தவிழாவின் இறுதி நாட்கள் இத்திங்களின் முதற் பகுதியில் நடக் கும். திருவோண நட்சத்திரத்தில் நடராஜப் பெருமானுக்கு உச்சிக் காலத்தில் மகா அபி டேகம் நடைபெறும். சிங்கார வேலருக்கு வசந்த விழா பதினேழு நாட்கள் நடைபெறும்.



193447

சித்திரைத் திங்கள் இறுதியில் கபாலீசுவரருக்குக் கத்திரி உற்சவம் தொடங்கி வைகாசித் திங்களின் முற்பகுதியில் முடியும்.

**வைகாசி:**

இத்திங்களில் திருஞான சம்பந்தருக்குப் பத்து நாட்கள் சிறப்பாக விழா நடத்துதல் பற்றி முன்னர்க் கூறப்பட்டது. புனர்பூச நட்சத்திரத்தில் சேக்கிழார் சுவாமிகள் யானை வாகனத் திருவீதிவிழா நடைபெறுகிறது. நடராஜர் சந்நிதியில் ஐக்கியம் ஆகும் ஐதீகமும் நடைபெறுகிறது.

**ஆனி:**

மாணிக்கவாசகருடைய திருநட்சத்திரம் மகமாகும். அன்று இரவில் பூப்பல்லக்கில் திருவீதி உற்சவம் நடைபெறுகிறது. நடராஜரிடம் ஐக்கியமாகும் ஐதிகமும் நடைபெறுகிறது. உத்திர நட்சத்திரத்தில் ஆனித் திருமஞ்சனம், நடராஜர் மூல நட்சத்திரத்தில் அருணகிரிநாதருக்கு அபிடேகம் நடைபெறுகின்றது. ஆனிச் சதயத்தில் சங்காபிடேகம் நடைபெறுகின்றது.

**ஆடி:**

ஆடி வெள்ளிக்கிழமைகளில் கற்பகவல்லிக்குச் சிறப்பாகப் பூசைகள் நடத்தப்படுகின்றன. ஆடிப்பூரத்தில் கற்பகாம்பாளுக்குச் சந்தனக் காப்பு சாத்தப்படுகிறது. இரவில் அம்பிகை கந்தர்வி வாகனத்தின் மீதமர்ந்து திருவீதி உலா வருதல் நடைபெறுகின்றது. பன்னிரு திருமுறை விழா இத்திங்களின் இறுதியில் தொடங்கி ஆவணித் திங்களின் தொடக்கத்தில் முடியும் வகையில் பதின்மூன்று நாட்கள் நடைபெறுகின்றது. பன்னிரு திருமுறைகளைக் கோயில் பிரகாரத்தில் உலாவரச் செய்து நடராஜர் சந்நிதியில் எழுந்தருளச் செய்தல், திருமுறைகளை அலங்காரங்களுடன் திருமுறை விமானத்தில் யானைமீது வைத்துத் திருவீதி உற்சவம் நடத்துதல் ஆகியவை நடைபெறுகின்றன. இத்திங்களில் பலித்ரோற்சவமும் நடைபெறுகின்றது.

**ஆவணி—விநாயகர் சதுர்த்தி:**

விநாயகர் சதுர்த்தியன்று மாலையில் கூத்தாடும் பிள்ளையாருக்குச் சிறப்பு அபிடேக அலங்கார ஆராதனைகள் நடைபெறும். இரவில் மூசிக வாகனத்தில் திருவீதி உற்சவம் நடைபெறும்.

**ஆவணி மூலம் பிட்டுத் திருவிழா:**

மதுரையில் மாணிக்கவாசகருக்காகவைகை ஆற்று வெள்ளத்தைத் தடுக்க வந்திக் கிழவியின் பாகத்தை அடைக்கச் சொக்கலிங்கப் பெருமான் கூலி ஆளாக வந்து வந்திக் கிழவியிடம் பிட்டு வாங்கித் தின்ற ஐதிகஉற்சவம் ஆவணி மூல நட்சத்திரத்தன்று நடைபெறுகின்றது. சந்திரசேகர சுவாமி இடப வாகனத்திலும், அவர் எதிரில் மாணிக்க வாசக சுவாமிகளும் எழுந்தருளத் திருவீதி உலாவரும் நிகழ்ச்சியும் நடைபெறுகின்றது.

**ஆவணி சதுர்த்தசி:**

நடராஜப் பெருமானுக்கு இந்நாளில் அபிடேகம் மாலை நேரத்தில் கோயிலுக்குள்ளே நடைபெறும்.

**புரட்டாசி:**

சதுர்த்தசி அன்று நடராஜருக்கு அபிடேகம் அர்த்தசாம வேளையில் நடைபெறுகின்றது.

**நவராத்திரி கொலு:**

இவ்விழா அமாவாசையன்று தொடங்கி ஒன்பது நாட்கள் நடைபெறும். கொலு மண்டபத்தில் கற்பகாம்பிகை சிறப்பு அலங்காரத்துடன் கொலு வீற்றிருப்பாள். பத்தாம் நாள் சந்திர சேகர சுவாமி குதிரை வாகனத்தில் பரிவேட்டை போதல், மேலண்டை வீதியில் அம்பு போடுதல், பரிவேட்டை மண்டபத்தில் ஆராதனை ஆகியவை நடைபெறும். பௌர்ணமி அன்று நிறைமணிக் காட்சியும் நடைபெறுகிறது. மகா மண்டபம் அலங்கரிக்கப்பட்டிருக்கும். எல்லாவிதத் தானியங்களும் காய்கனிகளும் கிழங்குகளும் சேகரித்து மண்டபம் அலங்கரிக்கப்பட்டிருக்கும். சந்திரசேகர சுவாமியின் திருவீதி உற்சவமும் நடைபெறும்.

**ஐப்பசி:**

தீபாவளி அன்று அதிகாலை நரக சதுர்த்தசி நீராடல், சிறப்பு அபிடேகம் ஆகியவை நடைபெறும். எல்லாத் தெய்வங்களுக்கும் எண்ணெய்க்காப்பு அபிடேகம் நடைபெறும். சிங்காரவேலர் கந்தர் சஷ்டி விழா ஆறுநாட்கள் கொண்டாடப்படுகிறது. முதல் நாள் கொடி ஏற்று உற்சவம் நடைபெறும். ஆறுநாட்களும் காலை மாலை யாகசாலை பூசை நடைபெறும். திருவீதி உற்சவமும் நடைபெறும். ஆறாம் நாள் சிங்கார வேலர் தேரில் எழுந்தருளுவார். மாலையில் சூரசம்காரம் வடக்கு மாடவீதியில் நடைபெறும். யானை, சிம்மம், புலி, ஆடு தலைகளை வெட்டிய பிறகு சூரன் மாமரமாகி தடுக்க, அதைப் பிளந்த பின்பு கோழியாகவும் மயிலாகவும் வடிவம் கொண்டு வேலனை வலம் வருதல், முருகர் மயில் வாகனத்தில் ஏறுதல், தேரிலிருந்து முருகர் இறங்கி மயில் மீதமர்ந்து மற்ற வீதி வலம் வருதல் ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறும். கோயிலுக்குள் வந்த பிறகு பிராயச்சித்தம் அபிடேகம் நடந்து, சுவாமி மறுபடியும் மாடவீதி வலம் வந்து திருவிழா நிறைவடையும். மறுநாள் திருக்கல்யாணம் நடைபெறும். உற்சவ யானை வாகனத்தில் திருவீதி மகா உற்சவம் நடைபெறும். மறுநாள் முதல் ஆறு நாள் விடாய் ஆற்றி உற்சவம் நடைபெறும். இந்த ஆறு நாளும் மண்டபத்தில் அபிடேகமும் ஆராதனைகளும் நடை—

பெறும். பௌர்ணமியன்று அன்ன அபிடேகம் நடைபெறும். சந்திர சேகர சுவாமி திருவீதி உற்சவமும் நடைபெறும்.

**கார்த்திகை:**

நான்கு அல்லது ஐந்து சோம வாரங்கள் (திங்கட் கிழமை) சிறப்பாகப் பூசைகள் நடைபெறும். நான்காம் சோம வாரத்தில் சிறப்பு அபிடேக அலங்கார ஆராதனைகள் நடைபெறும். கார்த்திகைக் கிருத்திகையில் அண்ணாமலையார் அபிடேக ஆராதனை, சொக்கப்பனை, சிங்காரவேலர் திருவீதி உற்சவம் ஆகியவை நடைபெறும். கபாலீசுவரருக்கு நான்கு சோமவாரங்களிலும் நூற்றெட்டுச் சங்கு அபிடேகம் நடைபெறும்.

**மார்கழி:**

இத்திங்களில் முப்பது நாளும் உற்சவகால பூசை நடைபெறும். அதாவது காலை 4-30 மணிக்குமேல் 6 மணிக்குள் தனூர் மாதம் உற்சவகால பூசையாகும். கார்த்திகை ஐந்தாம் சோமவாரம் கபாலீசுவரருக்கு ஆயிரத்தெட்டு சங்காபிடேகம் நடைபெறும். மாணிக்க வாசகர் திருவெம்பாவை விழா, பத்துநாள் நடைபெறும். முதல் நாள் முதல் பத்து நாள் வரையில் காலை வேளை மாணிக்கவாசகர் புறப்பாடு, கொடிமரம் முதல் மாடவீதி நவசந்திகள் வரை திருவெம்பாவை ஓதுதல், ஒரு சந்திக்கு இரண்டு இரண்டு திருவெம்பாவை பாட்டுப் பாடுதல் ஆகியவை நடைபெறும். மாணிக்க வாசகர் உற்சவத்தின் எட்டாம் நாள் மாலையில் கற்பகாம்பாள் கபாலீசுவரர் ஊஞ்சல் உற்சவம் நடைபெறும். இந்த ஊஞ்சல் உற்சவம் மூன்று நாள் நடைபெறும். மூன்றாம் நாள் மாணிக்கவாசகர் முன்னிலையில் ஊஞ்சல் விழா நடைபெறும். பொன்னூசலும் திருவெம்பாவையும் ஓதிய பின்பு பஞ்ச மூர்த்திகள் திருவீதி ஊர்வலம் வருதல் ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறும்.

திருவாதிரை உற்சவத்தன்று அதிகாலையில் நடராஜப் பெருமானுக்கு அலங்கார தீபாராதனை, சாந்து சேவை, சுவாமி புறப்பட்டுத் தேரடி போய்த் திரும்புதல், கோயிலுக்குள் தெற்கு நோக்கி வெள்ளை மல் துணியினால் சுவாமியைப் போர்த்துதல், உடனே சுவாமி பதினாறு கால் மண்டபம் எழுந்தருளி பத்தி உலாவுதல் ஆகியவை நடைபெறும். இதற்குச் சப்தபத உற்சவம் என்று பெயர். சுவாமி பதினாறு கால் மண்டபத்தை ஏழு தடவை சுற்றி வருவார். இதில் ஒவ்வொரு சுற்றுக்கும் தனித்தனி இசைக் கருவிகள் வாசிக்கப்படும். சுவாமி மறுபடியும் கோவிலுக்குள் எழுந்தருளுவார். பிறகு காலை ஒன்பது மணிக்கு ஆருத்திரா காட்சியும், திருவீதி உற்சவமும் நடைபெறும். வாயிலார் நாயனார் ஆண்டுத் திருநட்சத்திர உற்சவம் மார்கழி இரேவதி நட்சத்திரத்தில் நடைபெறும். பூப் பல்லக்கில் வாயிலார் திருவீதி ஊர்வலம் வருவார்.

---

## உத்தமர் இயல்பு எது?

**உணவில் எளிமை**
**உழைப்பில் கடுமை**
**ஒழுக்கத்தில் உயர்வே**
**உத்தமர் இயல்பாகும்.**

**—தவத்திரு வேதாத்திரி மகரிஷி.**

---

**தை:**

தைத்திங்கள் முதல்நாள் மகரசங்காரந்தி உத்தராயண புண்ணிய காலத்தில் சந்திரசேகர சுவாமி திருவீதி உற்சவம் நடைபெறும். இரண்டாம் நாள் மாட்டுப் பொங்கலன்று கற்பகாம்பாள் கன்னி உற்சவமும், காலையில் அம்மனுக்குக் குளக்கரையில் அபிடேக அலங்காரமும் ஆராதனையும் திருவீதி உற்சவமும் நடைபெறும். மாலையில் சந்திரசேகர சுவாமி சங்கராந்தி பரிவேட்டை, திருவீதி உற்சவம் நடைபெறும்.


இரத சப்தமி அன்று சந்திரசேகர சுவாமி இரதத்தில் எழுந்தருளி மேலண்டைக் குளக் கரையில் தீர்த்தவாரி நடைபெறும். திருவீதி உற்சவமும் நடைபெறும். தைத்திங்களில் நான்கு வெள்ளிக்கிழமைகளிலும்கற்பகாம்பாள் கோயிலுக்குள் பிரகார விழா நடைபெறும். சிங்காரவேலர் வனபோஜனவிழா நடைபெறும். அடையாறு அரங்கசாமி முதலியார், வன போஜனத் தோட்டத்தில் சிங்காரவேலர் எழுந்தருளி, சிறப்பு அபிடேகம், ஆராதனை சமாராதனை நடைபெற்று மாலையில் சிறப்பான அலங்காரத்தோடு வீதிவலம் வந்து கோயிலுக்கு திரும்புவார். தைப்பூசத்தில் மூன்று நாள் தெப்போற்சவம் மயிலாப்பூர் குளத்தில் நிகழும்.

**மாசி:**

மகா சிவராத்திரி விழாவன்று கபாலீசுவரரின் மூலவருக்கு நான்கு காலம் சிறப்பு அபிடேகம் நடைபெறும். அன்று பிரதோஷ விழாவும் சிறப்பாக நடைபெறும். மாசி மகம் பௌர்ணமியன்று சிறப்பாக நடைபெறும். திங்கள்தோறும் திருவாதிரையில் சோமாஸ்கந்தர் மூர்த்திக்கு நடந்தேறிய அபிடேகத்தின் சாந்தியாக நூற்றெட்டுக் கலச பூசை யாகங்களுடன் மூன்று வேளை நடைபெற்றுச் சுவாமிக்கு மகாமண்டபத்தில் மகா அபிடேகம் நடைபெற்றுக் கோயில் பிரகார உற்சவம் நடைபெறும். பங்குனிப் பெருவிழா இலக்கின பத்திரிகை வாசித்தில் நடைபெறும்.

(அடுத்த இதழில் நிறைவு பெறும்)

# பன்னிரு ஆழ்வார்கள்



பருத்தியூர்
டாக்டர் கே. சந்தானராமன்

## 7. பெரியாழ்வார்

ஸ்ரீவைஷ்ணவ நெறியில் கருடாழ்வாரைப் 'பெரிய திருவடி' என்றும், அனுமாரை, 'சிறிய திருவடி' என்றும் குறிப்பிடுவர். பெரிய திருவடியாகிய கருடாழ்வாரின் அம்சமாகத் திருவில்லிப்புத்தூரில் முகுந்தன்—பதுமை தம்பதியரின் தவப்பயனாய்த் தோன்றினார் பெரியாழ்வார். சிறு வயது முதலே தமது சித்தத்தைத் திருமாலிடத்து வைத்திருந்ததால் அவரை 'விஷ்ணுச்சித்தர்' என்ற திருநாமத்தால் அழைத்தனர். ஆனிச் சுவாதியில் அவதரித்தவர் விஷ்ணுச் சித்தர்.

விஷ்ணுச்சித்தருக்கும் சேனை முதலியார் எழுந்தருளி வைணவ நியதிகளைச் செய்து மந்திரமும் உபதேசித்தார். திருமாலுக்கு ஏதாவதொரு வகையில் தொண்டு செய்ய எண்ணினார் விஷ்ணுச்சித்தர். 'எத்தொண்டு ஏற்றது?' என ஆராய்ந்தார். கண்ணபெருமான் கம்சனை வதைக்க வடமதுரை எழுந்தருளிய பொழுது பூக்காரன் ஒருவன் கண்ணனுக்கு நறுமண மலர்மாலைகளைச் சமர்ப்பித்தான். அவனுக்குப் பெருமான் இவ்வுலகத்தில் நோயற்ற வாழ்கையும் குறைவிலாச் செல்வத்தையும் கொடுத்து முத்தியும் அளித்தார். அந்த வரலாறு விஷ்ணுச்சித்தரின் நினைவுக்கு வந்தது. தாமும் திருமாலைத் திருத்தொண்டு புரிவதெனத் தீர்மானித்தார். அதற்கேற்ற நந்தவனம் அமைத்தார். மலர்ச் செடிகளையும், மரங்களையும் நீரூற்றி வளர்த்தார். மலரெடுத்து மாலை தொடுத்து மாயவனுக்குச் சாத்தினார்.

அக்காலத்தில் வல்லபதேவன் என்னும் பாண்டிய மன்னன் மதுரை நகரிலிருந்து அரசாண்டு வந்தான். அவன் ஒருநாள் இரவில் நகரசோதனைக்காகச் சென்றான். அப்போது தீர்த்தயாத்திரை மேற்கொண்டிருந்த ஒரு வேதியச் சான்றோரைச் சந்திக்க நேர்ந்தது. அவரிடம் மன்னன் 'தாங்கள் அடியேனுக்கு ஏதேனும் உபதேசித்து அருளுக' என வேண்டினான்.

''மழைக் காலத்துக்காக மற்ற எட்டு மாதத்திலும், இரவுக்காகப் பகலிலும், முதுமைக்காக இளமையிலும் மறுமைக்காக இம்மையிலும் முயலக் கடவை'' என்றார் அச்சான்றோர். அனைவருக்கும் பொதுவான, எக்காலத்திலும், எந்நாட்டவர்க்கும் பொதுவான இவ்வரிய உபதேசத்தைப் பெரிதும் போற்றினான் மன்னன். 'மறுமைக்காகத் தான் ஏது செய்தல் ஏற்றது!' என்றான்.

'நல்லறிஞர்களை ஓர் அரங்கில் கூட்டி, அனைத்தும் அளிக்கவல்ல பரம்பொருள்குறித்து ஆராயலாம்' என்றார் அவர்.

அதன்படி மன்னன் பெருஞ்செல்வத்தைப் 'பொற்கிழியாக முடித்துக் கட்டினான். வேதப் பிரமாணங்களுடன் பரதத்துவத்தை நிரூபிப்பவர்களுக்கு இப்பொற்கிழி உரியதாகும்' என்றான். பலரும் மதுரை நகரை நாடி வந்தனர். பரதத்துவ நிர்ணயம் செய்ய முயன்று தோற்றனர்.

மாலைத்தொண்டு செய்து வந்த விஷ்ணுச்சித்தரின் கனவில் பெருமான் தோன்றினான். மதுரை சென்று யாமே (திருமாலே) மேலான பொருளென்று நிலை நாட்டுக' என்றார். 'அடியேனுக்கு வேதசாஸ்த்திர ஞானம் ஏதும் இல்லையே!' என்றார் விஷ்ணுச்சித்தர். 'அது குறித்துக் கவலை வேண்டாம். எல்லாம் எம் பொறுப்பு. புறப்படுக' என்றார் பெருமான். கார்மேகவண்ணன் கனவில் உரைத்தபடி ஆழ்வார் ஆலவாய் சென்றார்.

விஷ்ணுச்சித்தரைக் கண்டவுடன் அவையில் கூடியிருந்த அனைவரும் தம்மையறியாமலேயே அவர்பால் மதிப்பும் மரியாதையும் தோன்றக் கண்டனர். உடனே அவரைவணங்கினர். மன்னனும் வரவேற்று உபசரித்து 'தேவரீர்' தயவுசெய்து பரதத்துவம் நிலைநாட்டியருளுக' என வேண்டினான்.



பெருமானைத் தியானித்துப் பேசத் தொடங்கினார் பெரியாழ்வார். அத்தனைச் சித்தாந்தங்களையும் வெட்டியுரைத்து, வைணவமே மேலானசமயமெனவும் திருமாலே மயர்வு அறநின்ற ஒருவன் எனவும் நிலை நாட்டினார். பொற்கிழி, தானே அறுந்து ஆழ்வாரின் கரத்திற்கு வந்தது.

மன்னனும், ஏனையோரும் ஆழ்வாரை யானைமீதேற்றி நகர்வலமாக அழைத்துவந்தனர். கோலாகலமான விழாவாக அது நடந்தது.

தனது அடியார் சிறப்புடன் பவனிவரும் அழகைக்காண வைகுண்டவாசனும் வைகைத் தரணிக்கு வருகை தந்தான். பிராட்டியுடன் பெருமான் கருடாழ்வார் மீது எழுந்தருளி பெரிய ஆழ்வாருக்குக் காட்சி கொடுத்தான்.

பெருமானின் இணையில்லாப் பேரழகைக் கண்ட பெரியாழ்வார் பெரிதும் மகிழ்ந்தார். எனினும் கவலையும் கொண்டார். ஆம். அழியா அழகுடைய எம்பெருமானின் எழில் திருமேனி என்றும் பாங்காய்இருக்கவேண்டுமே என்ற கவலை அவருக்குத் தோன்றிவிட்டது. அக்கவலையுணர்வே கவிதையாய் மலர்ந்தது. அதுதான் ஆழ்வாரின் 'மங்களா சாஸனம்' என்னும் திருப்பல்லாண்டாகும்.

கடவுளிடம் தம் கவலைகளைக் கூறி அவை நீங்க வேண்டுவது மானிடர் இயல்பு, அதற்கு மாறாக அவனுக்காகக் கவலைப்பட்டு பல்லாண்டு பாடிய பெரியாழ்வார் புரட்சிக் கவிஞர்கள் வரிசையில் முதலிடம் பெறுகிறார்.

மற்ற ஆழ்வார்களையும், அடியார்களையும்விட அவ்வகையில் (பல்லாண்டு பாடிய வகையில்) பெருமை மிக்கவராகத் திகழ்வதால் விஷ்ணுச்சித்தர் 'பெரியாழ்வார்' என்று திருநாமம் பெற்றார்.

பொற்கிழியில் பெற்ற பொருளைக் கொண்டு ஸ்ரீவில்லிப்புத்தூர்திருக்கோயிலுக்குக் கோபுரம் கட்டி மகிழ்ந்தார் பெரியாழ்வார். தாம் பெற்ற செல்வத்தை இறைவனுக்கே கொடுத்ததுடன் பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்களும் கலைஞர்களும் பயன்பெற உதவினார். அவ்வகையிலும் இவர் பெரியஆழ்வார்தான்.

கிருஷ்ணாவதாரத்தைப் பெரிதும் அனுபவித்த பெரியாழ்வார் ஆதியந்த முதல் 'ஆயர் கோன்' பெருமைகளைத் தம்பாடல்களில் விவரித்தவர். இவரது பாடல்கள் 'பெரிய திருமொழி' என்றே போற்றப்படுகின்றது. அத்துடன் இவரது திருப்பல்லாண்டுதான் நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்தின் தொடக்கமாக விளங்குகின்றது. பெண்குலத்தின் பிரதிநிதியாக இன்னொரு ஆழ்வாரைப் பெற்றெடுத்துக் கொடுத்த பெருமையும் பெற்றவர் பெரியாழ்வார்.

எண்பத்தைந்து ஆண்டுகள் நீண்ட பெருவாழ்வு வாழ்ந்த பெரியாழ்வார் திருவரங்கம், திருவெள்ளறை, திருக்குடந்தை, திருக்கண்ணபுரம் முதலிய திருத்தலங்களைப் பற்றி பாடியுள்ளார்.

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா உன்
சேவடி செவ்வித் திருக்காப்பு.
அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி
ஆயிரம் பல்லாண்டு
வடிவாய் நின் வலமார்பினில் வாழ்கின்ற
மங்கையும் பல்லாண்டு
வடிவார்சோதி வலத்துறையும் சுடர்
ஆழியும் பல்லாண்டு
படைபோல் புக்கு முழங்கும் அப்பாஞ்ச
சன்னியமும் பல்லாண்டே.

—திருப்பல்லாண்டு.

193447

# அலங்கார நாயகன்

கம்பன் கவிநயமணி வே. தியாகராஜன்

## 9. யாவும் கடந்த இறைவன்

வள்ளி நாயகியைத் திருப்புகழில் வர்ணிக்கும்போது தேன்பாகு, பழுத்தபழம் போன்ற இனிமையான குறமகள், 'பாகுகனிமொழி மாது குறமகள்' எனக் குறித்தார். வள்ளியின் இதயம் கருணை நிறைந்தது. அந்தக் கருணையே முருகனின் முகத்தாமரையில் விளங்குகிறது. முருகப்பெருமானை எந்நேரமும் சிந்தித்ததால் வள்ளியின் இதயத்தில் முருகப்பெருமானின் திருமுகம் பதிந்திருந்தது என்றார்.

வள்ளியின் பாகு கனிமொழியில் ஈடுபட்ட முருகப்பெருமான் நக்கீரர் திருமுருகாற்றுப் படை பாடியபோது வள்ளிநாயகியின் குரலினிமைதனை மறந்து திருமுருகாற்றுப்படை வள்ளியின் குரலைக் காட்டிலும் இனிமையான தென மகிழ்ந்தான் என்பர் கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச சுவாமிகள்.

''பொன்னவிர்சுணங்குபூத்த புனல்முலைக்
கருங்கண் வள்ளி
கன்னலும் அமுதும் தேனும் கைக்கும் இன்
தீஞ்சொல்மாற்றித்
தன்னிகர்புலவன் கூறும் தமிழ்செவிதாழ்த்துக்
கேளா
அன்னிலை மனங்களிப்புற்று அறுமுகம்படைத்த
கோமான்''

—சீகாளத்தி புராணம்

அத்தகைய வள்ளியின் நாயகன் எனக்கு உபதேசித்த பொருளின் பெருமை கூற முடியாது. மயக்கறுமறையோலிட்டு மாலயன் தேடநின்ற சிவபெருமானின் குமாரன் கூறிய உபதேசம் அவனையே அடைய வைத்தது. அத்தகைய உபதேசத்தை என்னவென்பது. அது பூதமும் கரணமும் புலன்களும் குணங்களும் கடந்த பொருள். அந்த இன்பம் அனுபவ மூல மாகப் புரியுமேதவிர கூற முடியாது. வேத மந்திரம்கூட இறைவனை ஒவ்வொரு நாமமாக கூறி அழைத்துக்கொண்டே சென்று இறைவனைக் கண்டவுடன் நம (வணக்கம்) என முடிக்கிறது. 'ஓம் நமஸ்தே அஸ்து பகவன்
விசுவேஸ்ராய மகாதேவாய த்ரயம் பகாய
திருபுராந்தகாய திரிகாலாக்னிகாலாய
காலாக்னி ருத்ராய நீலகண்டாய
மிருத்யுஞ்சாய சர்வேஸ்வராய சதாசிவாய
ஸ்ரீமன் மகாதேவாய நம''.

என்பது மகாருத்ரம். 'இது அல்ல இது அல்ல' (நேதி : நேதி') எனத்தள்ளிக் கடைகியில் சொல்ல முடியாத தன்மையுள்ள இறைத் தன்மையைக் கூறினார் என்றார்.

தேனென்று பாகென்று உவமிக்கவொண்ணா
மொழித் தெய்வவள்ளி
கோன் அன்று எனக்கு உபதேசித்தது
ஒன்றுண்டு; கூறவற்றோ ர
வான்அன்று: கால்அன்று; தீயன்று; நீரன்று;
மண்ணுமன்று.
தான் அன்று: நான் அன்று: அசரீரியன்று
சரீரியன்றே''

## 10. சும்மா இருக்கும் சுகம்

மனம் நினைக்கிறது. நினைத்ததை வாய் பேசுகிறது. பேசியதை உடல் செய்கிறது. இந்த மூன்றையும் அடக்குவதே சும்மா இருத்தல். மனத்தை அடக்கி விட்டால் மற்ற இரண்டும் தானாக அடங்கிவிடும். பெட்டியில் தங்கத்தையும் இரத்தினங்களையும் வைப்போம், குப்பை கூளங்களை பத்திரப்படுத்த மாட்டோம். அது போல மனமெனும் பேழையில் இறைவனான நற்பொருளை வைத்து கோபம், அகங்காரம் ஆசை முதலானவற்றை நீக்க வேண்டும். அற்றது பற்றெனில் உற்றது வீடு என்பர். இத்தகைய நிலையை முருகப் பெருமான தனக்கு அளித்தது பற்றி அனுபூதியிலே

''சும்மாயிரு சொல்லற என்றலுமே
அம்மா பொருளொன்றும் அறிந்திலனே''

எனக் கூறினார். எல்லாம் நீக்கி சும்மா இருக்கின்றவர்களின் இதயத்தில் இறைவன் இருக்கிறான் என்று கூறுகிறார்.

'சொல்லொழிய: பொருளொழிய: கரண
மெலாம்
சேர்ந்தொழிய: உணர்வொழிய: விளங்கா
நின்ற
அல்லொழியப் பகலொழிய நடுவேநின்ற
ஆனந்த
அனுபவமே அதீதவாழ்வே'

தினைப்புனம் காக்கின்ற பெண். அழகிய இனிமையான சொல்லையுடையவள். (வள்ளியின் குரல் நாதநாமக்ரியை என்ற இராகம் போன்றது என்றும் முருகப்பெருமானுக்கு இந்த ராகம் ரொம்பவும் விருப்பமானது என்பர் தணிகைமணி திரு. செங்கல்வராய பிள்ளையவர்கள்) வள்ளிமலையில் வாழ்பவள். பவழம்



மகர மீன்மேல் நிற்கும் காங்கேய சுப்பிரமணியன்

போன்ற உதடுகளை யுடைய வள்ளி நாயகியை அணைத்துக் கொள்ளும் தோள்களையுடைய முருகப்பெருமானின் பெருமை இந்த ஞான வழியைக் காட்டி என்னை ஆட்கொண்டது என்றார்.

இறைவனைத் தவிர எதிலும் ஈடுபடாது உலகத்தோடு ஒட்டாது வாழ்வதையே சும்மா இருத்தல் என்றார். அந்நிலையடைய வள்ளி நாயகன் நமக்கும் 'அருளவேண்டுவோமாக'!

''சொல்லுகைக்கு இல்லைஎன்று எல்லாம்
இழந்து சும்மா இருக்கும்
எல்லையுள் செல்ல எனைவிட்டவா? இகல்
வேலவன் நல்ல
கொல்லியைச் சேர்க்கின்ற சொல்லியைக்
கல்வரைச் செவ்வாய்
வல்லியைப் புல்கின்ற மால்வரைத் தோள்
அண்ணல் வல்லபமே''.

## 11. மயிலின் மாண்பு

பிரணவம் மயிலாக வந்து முருகப் பெருமானைச் சுமந்தது என்பர். வேதமே மயிலாக வந்தது என்பர். தேவேந்திரன் தானே மயிலாக வந்து முருகப் பெருமானைச் சுமந்து சேவை செய்தான் என்பர். கந்தப் பெருமானின் மயிலான வேல் சிறகடித்துக் கொண்ட போது ஏற்பட்ட தடபுடல்களை, சிலர் அஞ்சுமாறு நடந்த காரியங்களைக் கூறுகின்றார்.

சிவபெருமானது வாகனமான நந்தி நடந்தபோது ஏற்பட்ட சம்பவங்களை காரைக்கால் அம்மையார் தமது அற்புதத் திருவந்தாதியில் கூறுவார்.

''நடக்கிற் படிநடுங்கும்; நோக்கில்திசைவேகும்
இடிக்கில் உலகனைத்தும் ஏங்கும்—அடுக்கல்
பொரும் ஏறோ! ஆன் ஏறோ!
பொன்னொப்பாய்! நின் ஏறு
உரும் ஏறோ: ஒன்றா உரை''

—அற்புதத்திருவந்தாதி—100

அது போல முருகப்பெருமான் ஏறும் ஆடும்பரியான மயில், கடிவாளத்தை இறுகப் பிடித்துக்கொண்டு சவுக்கினால் அடிக்கப் பட்டு வேகமாக ஓடும் குதிரையின் வேகத்தை வென்றது. அதன் தோகையசைந்த காற்றில் மேருமலையசைந்தது. அது அடி எடுத்து நடக்க எட்டுமலைகளும் நடுங்கின. மயில் சென்ற வேகத்தில் நடுங்கிய மலைகளிலிருந்து புறப்பட்ட தூசி, கடலையும் மேடிடச்செய்தது.

கடுந்தவமியற்றி, பரமனிடம் பெரும் வரங்களைப் பெற்று உலகம் யாவையும் அடக்கி வாழ்ந்த சூரன், அந்தத் தவங்களின் வலிமையால் மயிலாக ஆகி முருகப் பெருமானைச் சுமக்கும்பேறு பெற்றனன். உலகை அநியாயமாக அடக்கிய சூரன் முருகப் பெருமானின் வீரத்திற்குத் தோற்று அவரது கருணை கிடைக்க அவரைச் சுமக்கும் பேறு பெற்றான். எனினும் வீரம், அப்படியே இருந்தது. அவன் மயிலுருவம் கொண்டதும், முருகப் பெருமானைச் சுமக்கும் பெருமையிலும் அவன் நடக்கும்போது அவ்வீரம் வெளிப்பட்டது என்கிறார் இந்தப் பாடலில்:

''குசை நெகிழா வெற்றி வேலோன் அவுணர்
குடர் குழம்பக்
கசையிடுவாசி விசை கொண்ட வாகனப்
பீலியின் கொத்து
அசை படு கால்பட்டு அசைந்தது மேரு:
அடிஇட எண்
திசைவரை தூள்பட்ட: அத்தூளின் வாரி
திடர்பட்டதே''

## 12. சேவலின் பெருமை

மயில் ஓம் என்ற உருவத்தைக் காட்டும். சேவல் ஓம் எனக் கூவும். சூரன் போர்க் களத்தில் சேவலும், மயிலுமாகத் தோன்ற, முருகப் பெருமான் மயிலை வாகனமாகவும், சேவலைக் கொடியாகவும் கொண்டனர் எனக் கந்த புராணம் கூறும்.

''அக்கணம் எம்பிரான்தன் அருளினால்உணர்வு
சான்ற
குக்குட வுருவை நோக்கி கடிதில் நீ கொடியே
ஆகி
மிக்குயர் நமது தேரின் மேவினை ஆர்த்தி
என்னத்
தக்கதே பணியிதென்னா எழுந்தது தனித்து
விண்மேல்''

கந்த புராண சூரன் வதை—497

சேவல் கூவுவதின் காரணத்தைச் 'சேவல் அலங்காரம்' என்று நூலின் ஆசிரியர் 'முருகனது அருள் வெள்ளத்தில் முழுகாமல் தூங்கிக் கொண்டிருக்கின்றீர்களே' எனச் சேவல் கூவி எழுப்புகிறது என்றார்.

''ஓங்கித் துதிக்கமறை களெல்லாம் உயர்
செந்திலிலே
தேங்கிக் கிடக்கும் குகனருள்வாரி
திளைப்பதன்றித்
தூங்கிக் கிடப்பீர் விழிமின் என்று எம்மைத்
துயிலுணர்த்தி
வாங்கி எடுப்பாய் பிறவி கடலினின்று
வாரணமே''

அலங்கார ஆசிரியரான அருணகிரி நாதர் 'முருகப் பெருமானுடன் போர் செய்ய எண்ணம் கொண்டு வந்த சேவல் அவ்வெண்ணம் நிறைவேறாமல், முருகனருளால் ஞானம் பெற்று அவனது கொடியாகும் பேறு பெற்று, தன் சிறகை அடித்துக் கொள்ள கடல் கிழிந்தது பிரம்மாண்ட கோளம் உடைந்தது. நட்சத்திரங்கள் உதிர்ந்தன. மலைகள் பொடியாயின என்கிறார்.

''படைபட்ட வேலவன் பால்வந்த வாகைப்
பதாகைஎன்னும்
தடைபட்ட சேவல் சிறகு அடிக் கொள்ள
சலதி கிழிந்து
உடைபட்டது அண்டகடாகம்: உதிர்ந்தது
உடுபடலம்:
இடைப்பட்ட குன்றமும் மாமேரு வெற்பும்
இடிபட்டவே''.

## 13. சலங்கையொலி

சிதம்பரத்தில் நடராஜமூர்த்தி இடது காலைத் தூக்கி ஆடிய கோலத்தில் நிற்கின்றார் திருமாலான கோவிந்தராசன் எதிரிலேஅப்படி நிற்கலாமா! என்று ஒருவர் கேட்க இடதுபக்கம் சிவகாமி அம்மையுள்ளாள். அவள் திருமாலின் தங்கை. அண்ணனான திருமாலுக்கு எதிரே இடது காலைத்தான் தூக்கி நிற்கிறார். வலது காலல்ல. வலது காலைத் தூக்கினால்தான் திருமாலுக்குக் குற்றம் செய்த மாதிரி' என்று ஒரு பெரியவர் பதில் கூறினார். அம்மைக்குத் தனியுருவம் கிடையாது. இறைவன் கருணையே அம்மையாக வந்தது என்றனர் பெரியோர். அப்படிப்பட்ட கருணையின் உருவமான அம்மை ஒரு பங்கில் இறைவனை வைத்துள்ளாள் என அம்மைக்கு ஏற்றம் கூறுகிறான். அம்மையின் ஒரு சிரமும் அப்பனின்

---

## மௌனமே தங்கம்

**பயனற்ற சொற்களைப் பேசக்கூடாது.**

**பேச்சு வெள்ளி என்றால் மௌனம் தங்கம் ஆகும்.**

**Speech is Silver Silence is Golden.**

---

ஐந்து தலைகளும் சேர்ந்து ஆறுமுகப் பெருமானாக வந்ததாகக் கூறுவர். மற்ற தெய்வங்கள் இரண்டு கண்களால் நோக்கிக் கருணை புரியும். முருகப் பெருமான் பன்னிரண்டு கண்களால் கருணை புரிவார். மற்ற தெய்வங்கள் இரண்டு அல்லது நான்கு கைகளால் அள்ளி அருளுவதை முருகப் பெருமான் பன்னிரண்டு கைகளால் செய்வார். கருணையின் உருவமான அம்மையின் மகன் முருகன். அப்பெருமான் நடந்து வரும்போது அரையிலுள்ள சதங்கைகள் சத்தமிட்டன. அவர் நடை பயின்ற அழகை

''தட்டைஞெகிழ் அங்கழல் சதங்கைகள்
சிலம்பக்
கட்டழகுமேய: அரைஞான்மணி கறங்க
வட்டமணிகுண்டலமதாணி நுதல் வீர
பட்டிகை மினக் குமரன்ஆடல்பயில்கின்றான்''


எனக் கந்தபுராணமுடையார் கூறுகிறார்.''

சூரபத்மனின் கொடுமைக்கு ஆளாகிய தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட, சிவபெருமான் தனது நெற்றிக் கண்ணிலிருந்து ஆறு பொறிகளை உண்டாக்கி முருகனது தோற்றம் உண்டாகச் செய்தது கண்டு தேவர்கள் மகிழ்ந்தனர்.

அக்குழந்தை வளர்ந்து தளிர்நடைபயின்ற காலத்து அரக்கர்கள் திடுக்கிட்டுப் பயந்தனர். எட்டுமலைகளான இமயம். மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலகிரி, கந்தமாதனம், ஆகிய மலைகள் அந்தஓசை கேட்டு அதிர்ந்தன. முருகப் பெருமானின் அவதாரம் ஆகி, நமக்கு நல்ல காலம் வந்து விட்டது எனத் தேவர்கள் மகிழ்ந்தனர்.

''ஒருவரைப் பங்கிலுடையாள் குமாரன் உடை
மணிசேர்
திருவரைக் கிங்கிணி ஓசைபடத் திடுக்கிட்டு
அரக்கர்
வெருவர; திக்குச் செவிடுபட்டு; எட்டும்
வெற்பும் கனகப்
பருவரைக் குன்றும் அதிர்ந்தன தேவர்
பயங்கெட்டதே''

(தொடரும்)




# ஸ்ரீ நாலாயிர திவ்யப்பிரபந்தம்

டாக்டர். ஜெகத்ரட்சகன்

## நயவுரை பிறந்த வரலாறு

'குலம் தரும்; செல்வம் தந்திடும்; அடியார்
படுதுயர் ஆயின எல்லாம்
நிலம் தரம் செய்யும்; நீள் விசும்பு அருளும்;
அருளொடு பெருநிலம் அளிக்கும்;
வலம் தரும்; மற்றும் தந்திடும்; பெற்ற
தாயினும் ஆயின செய்யும்;
நலம் தரும் சொல்லை நான் கண்டுகொண்டேன்
நாராயணா என்னும் நாமம்.''



நயவுரை நல்கிய நற்றமிழ் நம்பி
டாக்டர் ஜெகத்ரட்சகன்

எங்கள் குலமரபும் குடி வழியும் வழிவழியாக முழுமுதற் கடவுளாகத் திருமாலை வழிபடுபவர்கள். எந்தை தந்தை தந்தை தம் தந்தைக்கு முந்தையர் அனைவரும் வன்மை யாவதே கோயிலில் வாழும் வைட்டணவன் என்னும் வன்மை கண்டவர்கள்.

எம் தந்தையார் அறநெறிச் செல்வர் சாமிக்கண்ணனார் ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நான்' என்று நாராயணனையே நாளெல்லாம் நெஞ்சில் வைத்துப் போற்றியவர். தமிழ் நெஞ்சம் பத்திப் பயிர் தழைக்கும் அன்பு வயலாகும் என்பதற்குச் சான்றாக வாழ்ந்தவர். தொல் பழந்தமிழர் வழிவழி மாயோனை வழிபட்டும் தூயோராய் விளங்கிய ஆயர்குலவிளக்கு கண்ணனுக்கே ஆட்பட்டவர். 'நாம் கடன் பட்டோம் வேங்கடவனுக்கே' என்று ஓங்கி உலகளந்த உத்தமனைப் பாங்குற மனத்தில் தாங்கியவர். உள்ளம், உரை செயல் மூன்றையும் உயர்வு அற உயர் நலம் உடையவனுக்கே தந்து துயர் அறுசுடர் தொழுதவர்.

'ஆன்ற தமிழ் மறை' என்றும் 'திராவிட சாகரம்' என்றும் மதிக்கப்படும் பன்னிரண்டு ஆழ்வார்களின் அருளிச் செயலாகிய "நாலாயிர திவ்யப் பிரபந்தம்' பாசுரங்களின் மூழ்கி பகவானைச் சிந்தித்துப் பாடல்களை எப் பணியை செய்தாலும், ஏமுறப் பெற்றாலும், ஏதவதிப் பட்டாலும், பாடிக்கொண்டிருப்பர். பண்ணார் பாடல் இக் கனிகளை எண்ணாத பொழுதில்லை; 'உண்ணும் சோறு, பருகும் நீர், தின்னும் வெற்றிலை எல்லாம் கண்ணன் எம் பெருமான் தாள்' என்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ என்னை என் தந்தை நாலாயிரத்துக்கு மேல் ஓராயிரம் இல்லை என்று, பாலாய், பழமாய், தேனாய், ஆழ்வார்கள் பாடல்களை என் செவியில் ஊட்டிக்கொண்டே இருந்தார்.

என்னுடன் பிறந்தவர்கட்கெல்லாம் பேராயிரம் உடைய பெருமான் நினைவாக (தமையன்) ஜெயராமன் (தமக்கையர்) கண்ணாமணி வைகுந்தம், நாராயணி என்று பெயரிட்டு, மயர்வு அற மதிநலம் அருளி, அயர்வு அற அமரர்கள் அதிபதியிடம் பாடி ஆடிப் பணிந்தேத்த ஆளாக்கினார்.

இளமையில், சின்னஞ்சிறு பாலனாய் இருக்கும்போதே என்செவிக்கமுது செந்தமிழ்ப் பாடல்கள்தாம். திருமாலின் தசாவதாரக் கதைகளை என் தாய் இலக்குமி அம்மையார் கூறுவது என் தந்தையார் பாடிய பாசுரங்களுக்கு விளக்கம் தருவது போல் இருக்கும். பள்ளி நாட்களும், கல்லூரி நாட்களும் பென்னம் பெரியவனாகியபோது என் தந்தையார் வாங்கி வைத்திருந்த 'நாலாயிர திவ்யப் பிரபந்தம்' பல பதிப்புகள் என் கையில் தவழ்ந்து கருத்தில் ஊன்றின. செவி வாயாக நெஞ்சு களனாகக் கொண்ட பாடல்கள் விழிக்குள் பட்டதும் தவிக்கும் பசிகாரனுக்குக் குவிக்கும் அக்கார அடிசிலாயிற்று. மரத்துள் அடங்கி



இருக்கும் ஆற்றல், அதில் பசுந்தளிரையும் வண்ண மலர்களையும் தோற்றுவிப்பது போல், என்னில் நாலாயிர திவ்யப் பிரபந்தம் உள்ளொளியைப் பெருக்கிற்று.


எந்தையர் வாங்கி வைத்திருந்த வியாக்கியான நூல்கள், மற்ற வைணவத் தொடர்பான தத்துவ நூல்கள் பிரபந்தசாரம்' எனப் பலப் பல. அதில் பிரதிவாதி பயங்கரம் ஸ்ரீ அண்ணங்கராசாரியர் எழுதிய மிகப் பாரிய உரைத் தொகுப்புப் பல்லாயிரம் பக்கங்கள்கொண்டது. பாசுரங்களின் உரை வைணவ தத்துவங்களின் அனைத்து எல்லைகளையும் கொண்டு தமிழும் சமஸ்கிருதமும் கூடி எவரையும் திகைக்க வைக்கத் கூடியதாய் இருக்கிறது. கற்றார்க்கு அன்றி மற்றவர்க்கு எளிதில் விளங்கும்பான்மை அதில் இல்லை.

ஆண்டாளின் பாசுரங்கட்குப் பலர் இந்நாளில் உரை எழுதியுள்ளனர். ஆனால் அந்த அளவிற்கு மற்ற ஆழ்வார்களின் பாடல்களுக்கு அவ்வளவாக உரைகள் எழுதப்படவில்லை. பழைய பெரியோர்கள் செய்த உரைகள் சீரும் சிறப்பும் செழுமையும் கொழுமையும் அருமையும் பெருமையும் கொண்டவை. ஆனால், மொழிநடை இக்காலமக்கட்கு எளிதில் புரியா. பாசுரங்களின் பொருளை விடத் தத்துவப் பொருள்களே, வைணவ சம்பிரதாய திட்ப நுட்பங்களே மிகுந்துள்ளன. இக்காலத்தே எழுந்த சில உரைகள் பல்வேறு ஆசிரியர்கள் பூர்வர்களின் உரைகளைத் தழுவி எழுதினாலும் ஓரளவு கற்றவர்களுக்கேயாம். தமிழை ஓரளவு எழுதிப் படிக்கத் தெரிந்தவர்களும் எளிதில் ஆழ்வார்களின் பாசுரப் பொருளைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தை என் வாழ்வின் ஒவ்வொரு ஏற்றத்திலும் உந்தாற்றலாய் இருக்கும் 'உடம்பொடு உயிராய்' இயங்கும்-இயக்கும் மனைவி, நான் ஆழ்வார்களின் அருளிச் செயலில் ஆழும் பொழுதெல்லாம் 'அந்தமிழால் நற்கலைகள் ஆய்ந்துரைத்த' பாடல் அருமைகளைச் சொல்லும் போதெல்லாம், மேலொரு பொருளும் இல்லா மெய்ப்பொருளை' அனுபவித்து அகங்குழைந்து குழந்தைகளுடன் கேட்டிருந்து பாச்சுவையில் ஈடுபட்டு பக்திப் பெருக்கில் பேச்சாடும் போதெல்லாம் தமிழ் மறைக்குச் சொல்லும் பொருளும் அறிய எளிய உரையை எழுதுங்கள் எழுதுங்கள் என்பாள். இதற்கு முன் திருக்குறளுக்கு அவ்வாறு ஓர் உரை செய்தேன்.

ஸ்ரீவைஷ்ணவம் என்ற பக்தி நெறிப் பழக்கத்தில் ஊறித் திளைத்த தீதில் நன்னெறிச் சீலராகிய என் தமையன் ஜெயராமனை நினைத்துக் கொள்வேன். அவர் எனக்கு ஒரு முன்னோடி. ஸ்ரீமந் நாதமுனிகள், ஆளவந்தார் எம்பெருமானார் முதலிய ஆசார்யர்களால் ஆதரிக்கப்பட்டு பட்டர், நம்பிள்ளை, பிள்ளை லோகாசார்யர், அழகிய மணவாளப் பெருமாள் நாயனார், மணவாள மாமுனிகள், சிறப்பாகப் பெரியவாச்சான் பிள்ளை போன்ற பெரிய வியாக்கியான கர்த்தாக்களையும் என் புல்லறிவையும் எண்ணிப் பார்ப்பேன், மனைவிளக்கிய மனைவி அனுசூயா, 'இருள்கடிய ஒரு சிறு தீபச்சுடரை ஏற்றி வைப்பவர், வானெங்கும் ஒளிபரவ வழி செய்பவராவர் அன்றோ' என்றனள். மனைவிளக்கு என் மனவிளக்கானதும் ஒரு துணிவு ஏற்பட்டது.

அந்தக் கால கட்டத்தில்தான் நிறை வாழ்வு வாழ்ந்த எந்தையர், நோய் நொடியற்று இருந்து வாய் மணக்க, மொழி மணக்க மாயோனைத் தூயோனை ஓயாது பாடிய படியே தம் தொண்ணூற்று ஏழாவது வயதில் பாயும் படுக்கையும் ஆனார். ஒரு வாரத்தில் தம் இறுதியை உணர்ந்து உறுதியுடன் என்னை அழைத்து ஆளவந்தார் எப்படி தம் விருப்பங்களை நிறைவேற்றும்படி ஸ்ரீ இராமானுஜர்க்குக் கூறினாரோ அவ்வாறே என் தந்தையும் 'நீ' ஆழ்வார்கள் அமுதத்தைச் செவியாலும் விழியாலும் மனத்தாலும் உண்டவன்; உன்னால் ஆன கடமையைச் செய்' என்று கூறித் திருநாடு அலங்கரித்தார். பாட்டும் முறையும், படுகதையும் பல்பொருளும் ஊட்டிய எந்தையின் பிரிவு என்னை வாட்டியதெனினும், 'கவிக்கு நிறைபொருளாய் நின்றானை, நேர்பட்டேன். பார்க்கின் மறை பொருளும் அதுவேதான் என்ற துணிவு துணை செய்தது.

திரிநுனி கொழுந்து விட்டெரிந்தால் விளக்கு எரிகிறதென்றுதானே பொருள். செவிக்கினிய செஞ்சொற்களின் பொருளையும் செறிவையும் பொலிவையும் உயர்ந்த கவிதை அம்சங்களையும், ஒப்பிலா மணியான உள்ளுறையையும் ஸ்ரீவைஷ்ணவ ஞானக் களஞ்சியமான எந்தையை எண்ணி எண்ணி நாலாயிரத்திற்கும்



எல்லார்க்கும் விளங்கும்படி எளிய தமிழில் உரை எழுதினேன். இதனைக் கண்டதும் 'நய வுரை' என்றார் அண்ணன் த. கோவேந்தன்.

சடகோபராகிய நம்மாழ்வார் 'திருவிருத் தம்' அகப்பொருள் மிகக் கொண்டிருப்பினும் உள்ளுறையின் நுட்பம் மிக்கது. அதனை வெளி படுத்தும் வகையில் பிற அகப்பொருள் பாடல்கள் போல் தொகச் செல்ல அஞ்சியே தெளிவுரை தரவில்லை.

எந்தையின் ஞானச் சுடர்விளக்கு அணையாமல் இருக்க 'ஆழ்வார்கள் ஆய்வு மையம்' ஒன்றை நிறுவினேன். அதன் வழி நாலாயிர திவ்யப் பிரபந்தம் நயவுரை வெளி யிடத் திட்டமிட்டேன். கல்விக் களஞ்சியம் என்ற பட்டம் பெற்ற அண்ணன் த. கோவேந் தன் செயலாளர்-பொருளாளர் பொறுப்பேற்ற தோடு பதிப்புப் பணியையும் தாமே ஏற்றார். இந்நூலின் முதல் பலனாக நான் அறிந்தது நயவுரைப் பதிப்பில் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட அண்ணன் த. கோவேந்தன் மும் முறை நெஞ்சு நெருக்கால் தாக்கப்பட்டவர், அவர்க்கு அந்நோயின் கடுமை தணிந்து 'நன்மை யுடையாளன் சீர் பரவப் பெற்று நான் ஒரு குறைவு இலனே' என்ற மொழி தான். இதனி னும் ஒரு வெற்றி உரையாசிரியனுக்கு உண்டோ! தென்னாட்டின் மொழி-இன-சமய பண்பாட்டு வளர்ச்சிக்கு முக்கால் நூற்றாண்டு காலம், அயராது உழைக்கும் சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகத்தின் இன்றைய மே லாண்மை இயக்குநர் இரா. முத்துக்குமார சாமி மையத்தின் நெறியாளராக இருந்து, இந் நயவுரை வர அனைத்து உதவிகளையும் நேரம் காலம் பாராமல் செய்துதவினார். இந்நூற் பதிப்புக்குப் பல மூல நூல்களையும் உரை நூல்களையும் தத்துதவியவரும் நெறியாளரே. மற்றும் செயற் குழுவினரும் எனக்குப் பெரி தும் ஒத்துழைத்தனர்.

மூலநூல் செம்பதிப்பு மர்ரே எஸ். ராஜம் (1956) அவர்களுடையதையே ஏற்றேன். பல நூல்களில் இசைக் குறிப்புகள் இருப்பினும் அவை ஒரு சீராக இல்லை. நூல் அமைப்பிலும் ஒரு சீர்மை மாறியுள்ளது. எனவே அனைத்து வகையிலும் ராஜம் பதிப்பே என் நயவுரைக்கு முன்னோடி. இந்நூலின் நிறைவெல்லாம் எந் தைக்குரியது. குறையிருப்பின் எனக்குரியது. தமிழுலகம் இவ்வுரையை ஏற்று மகிழட்டும்.

''பொய்கைமுனி பூதத்தார் பேயாழ்வார் தன்
பொருநால்வரும் குருகேசன் விட்டுசித்தன்
துய்யகுல சேக ரர்நம் பாண நாதன்
தொண்டரடிப் பொடிமழிசை வந்த சோதி
வய்யமெலாம் மறை விளங்க வாள் வேல் ஏந்து
மங்கையர்கோன் என்றிவர்கள் மகிழ்ந்து பாடும்
செய்ய தமிழ் மாலைகள் நாம் தெளிய ஓதித்
தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றோமே''

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

**(நயவுரையை வரும் இதழ் முதலாக அன்பர்கள் படித்து மகிழலாம்)**

அருள்மிகு

# பண்ணாரி அம்மன் திருக்கோயில்

பண்ணாரி அஞ்சல், (வழி) சத்தியமங்கலம்-638 401. பெரியார் மாவட்டம்.

## பங்குனி குண்டம் பெருந்திருவிழா

1994-ஆம் ஆண்டு குண்டம் திருவிழா கீழ்க்கண்ட விவரப்படி நடைபெறவுள்ளது.

**28-3-94 திங்கட்கிழமை இரவு "குண்டம் திருவிழா"**

**30-3-94 புதன்கிழமை இரவு "புஷ்பரதம்"**

**4-4-94 திங்கட்கிழமை இரவு "மறு பூஜைத் திருவிழா"**

குறிப்பு; 1. ''குண்டம் மற்றும் மறுபூஜை' நாட்களில் வழக்கம் போல் இன்னிசைக் கச்சேரிகள் நடைபெறும்.

2. பண்ணாரிக்கு பல பகுதிகளில் இருந்தும் தனிப்பேருந்து வசதிகள் உண்டு. பக்தர்கள் சௌகரியம் கருதி மலிவான விலையில் புளி சாதம், தயிர்சாதம் தயார் செய்து திருக்கோயில் மூலம் விற்பனை செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பக்தர்கள் திருவிழாவில் கலந்து கொண்டு காணிக்கைகளை செலுத்தி அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருவருளைப் பெற்றுய்யும்படி வேண்டுகிறோம்.

3. இத்திருக்கோயிலில் தமிழக அரசு ஆணைப்படி அம்பாளுக்கு உச்சிக் காலத்தில் நைவேத்தியம் செய்து பக்தர்களுக்கு இலவச மதிய உணவு வழங்கும் திட்டம் நடைபெற்று வருகிறது. பக்தர்கள் இந்தத் திட்டதிற்கு ரூ.1,000 அல்லது அதற்கு மேல் நன்கொடை செலுத்தி பங்கு கொள்ளும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

4. அருள்மிகு அம்பாளுக்கு தங்கரதம் செய்யஉத்தேசிக்கப்பட்டுள்ளது. அன்பர்கள் இந்தத் திட்டத்திற்கு தங்களது காணிக்கைகளை செலுத்துமாறு அன்போடு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

193447

இங்ஙனம்.

**வெ. குணசேகரன்,** பி.ஏ.,பி.எல்.,
துணை ஆணையர் [நிர்வாக அதிகாரி]

**எஸ். கே. பழனிச்சாமி**
**எம். விவேகானந்தன்**
**ஆ. தங்கவேல்**
**எ. சிவகுமார்,** பி.ஏ. ,பி.எல்.,
**டி. சிவகாமி**
(அரசு நியமன அறங்காவலர்கள்)

**ராஜாமணி தங்கவேல்**
தலைவர், அறங்காவலர் குழு.

**ஆ. ராஜப்பன்**
**சி. கே. கோதண்டராமன்**
**ப விரப்ப கவுடர்**
**வீ. புருஷோத்தமன்**
**சி. வீ. ராஜேந்திரன்**
(பரம்பரை அறங்காவலர்கள்)

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-600034
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.,
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002